"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

பூலோகவியாஸன்.

பிரதி மாதமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை, 1906ளு மார்ச்சு, ஏப்ரல்மீ 5உ. [பகுதி 6-7.

உ

திருவருட்சகாயம்.

திருக்குருகூர் - ஸ்ரீமத் - ஞானசித்தமூர்த்திகள்

திருவாய்மலர்ந்தருளிய

வெண்பா.

மேலோக மாதிபுகழ் மிக்கோர்சொன் னூல்வழிசெல்
பூலோ கவியாஸப் புத்திரநின்—கோலா
கலங்கண்டே னின்வழியே காசினியோர் மேவப்
பலந்தந்தே யாளும் பரை.

கொயமுத்தூர்ஜில்லா, காங்கயம், அஷ்டாவதானம், சிலேடைச்சிங்கம்,

ம-ள-ள-ஸ்ரீ, V. சேஷாசலநாயடு அவர்கள் பாடிய

மங்கலவாழ்த்து வெண்பா.

மேலோ கவியாஸன் வித்வஜன பூஷணனெம்
பூலோ கவியாஸன் பூணணிமின்—வீலோக
மாலோ கவியாஸன் மார்க்கமுறு வீரிலேச்சா
வாலோ கவியாஸன் மம.

திருக்குறள் - ஒழுக்கமுடைமை

தத்தம் நிலைக்கு பெரியோர்களாற் சொல்லப்பட்ட நல் ஒழுக்கத்தை யுடைத்தாயிருத்தல் என்பது இத்தலைப்பின் பொருளாகும். இஃது அடக்கமுடைமையின்பின் அமைக்கப்பட்டதென்னையோவெனில், மனம்வாக்குகாயமாகிய மூன்றிலும் அடங்கினவர்க்கல்லது நல் ஒழுக்கமுடைத்தா யிருத்தல் கூடாமையாகலான் இங்கமைப்பட்டது. சில போலி ஞானிகள் ஒழுக்கமவசியமின்று, ஒழுக்கம் ஞானத்திற்கேதுவாகா எனக் கூறுதலுமுண்டு. இஃது தவறுடைத்தே. எங்ஙனமெனின் தத்தம் வகுப்பிற்கும் நிலைக்கு மேற்படுத்தியுள்ள ஒழுக்கங்களில் தவறாது நடக்க அறம் வளரும். அறம் வளரப் பாவமழியும். பாவமழிய அறியாமை அகலும். அறியாமை அகல நித்திய அநித்தியங்களின் வேற்றுமை யுணர்ச்சியும், இம்மை மறுமை யின்பங்களில் வெறுப்பும் பிறப்பின் துன்பங்களும் தோன்றும். இவைதோன்ற முத்தியில் ஆசையுண்டாகும். அவ்வாசையுண்டாக பிறவிக்கு காரணமாகிய பயனிலா வினைகளெல்லாமகன்று முத்திக்கு ஏதுவாகிய யோக முயற்சியுண்டாம், அஃதுண்டாக உண்மை ஞானமெய்தி அகங்கார மமகாரங்களறும், இஃதேகத்த

ஞானமாம். "யானெனதென் செருக்கறுத் தீர்த்தமகனே மெய்ஞ்ஞானியென்றோதிய வுந்தீபற, நான்மறை யாதிய வுந்தீபற" என்னும் பெரியோர் வாக்கையுணர்க. ஆகவே இத்தகைய சுத்தஞான பிராப்திக்கு முதற்காரணம் ஒழுக்கமெனவறிக. இதனால் போலி ஞானிகளின்கூற்று ஆதாரமற்றதெனக் கண்டு முன்னோர் ஒழுக்கந்தவறாது நன்னெறி யொழுகுவாராக. ஒழுக்கத்தின் சிறப்பை யுணர்த்த நாயனார்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்." என்றார். ஒழுக்கமே எல்லார்க்கும் மேலாஞ் சிறப்பினையே தருதலால் அவ்வொழுக்கம் தம்முயிரைப் பார்க்கினும் மேலாய்ப் பாதுகாக்கப்படல் வேண்டும். ஒருவர்க்கு உயிரினுஞ்சிறந்தது வேறொன்றில்லாதிருக்க, அவ்வுயிரினும் ஒழுக்கத்தை மேலாய் பாதுகாக்க வேண்டுமென்ப தென்னையோவெனில் ஒருவரது உயிர் நல்வினைக்கும் தீவினைக்கும் சாதனமாயிருந்து இன்பத்துன்பங் குட்படுத்தும், ஆனால் ஒழுக்கமோவெனில் துன்பமில்லாது இன்பமே அளிக்குமென்பதனா லெனக. பின்னும் ஒழுக்கத்தின் சிறப்பைக் காட்டநாயனார்,

"பரிந்தோம்பி காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை." என்றார் இதிலுங்கூட வருந்தியும் ஒழுக்கத்தைக் காக்கவேண்டுமென்றார். ஆதுலர்க்குச் சாலை முதலாகிய பல அறங்களையும் ஆலோசித்துப் பார்க்குமிடத்து அவைகளின் மேலாய் ஒழுக்கமே சிறந்ததாகக் கொள்ளப்படுமென்றார். ஆகவே ஒழுக்கம் சிறிதுமில்லாது உலகப்புகழுக்காக சத்திரம் முதலியன கட்டும் மேல்வேஷக்காரரின் தர்மத்தால் யாதொரு பயனுமிலையென அறிந்து முதல் தங்களைத் திருத்திக்கொண்டுஉலகப்புகழ் வேண்டாது தர்மஞ் செய்வாராக. இனி ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தலாலும் அப்படிக்கில்லாது விட்டு விடுவதாலும் முறையே உண்டாகும் சிறப்பு இழிவுகளைக் காட்டுவான் வேண்டி முதலில்,

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்." என்றார். இதில் நாயனார், பிறப்பினாலேயே உயர்குலமாக உலகத்தாரால் மதிக்கப்படு மொருவன் ஒழுக்கமற்றவனாயிருந்தால் உண்மையில் இழிகுலத்தானாகி விடுகின்றான் என்றும், இழிபிறப்பாகக் கொள்ளப்படு மொருவனும் ஒழுக்கம் கடைபிடிப்பானாயின் மேல்குலத்தானாகிறான் எனக் கூறியிருக்கின்றனர். குறளைப்பற்றி பேசுமுன்னம் உள்ளபடி சாதியெப்படியோ எனில், முன்னோர் ஒவ்வோர் கருமமும் இடையூறின்றி நடக்கும்பொருட்டு தம்முள் வகுப்புகளாகப் பிரித்து வேறுபாடின்றிநடத்திவந்தனர். அஃது காலமாக ஆக தொழில் வித்யாசத்தினால் மாத்திரம் வேறுபட்டவர்கள் என்றுணராது பின்னோர், தொழிலில் ஏற்றத் தாழ்வு உண்டென தங்கள் புன்மதிக் கேற்க கொண்டு ஏற்றத்தாழ்வு காட்டிவந்தனர். அதனால் அத்தொழிலாளிகள் பேதமாகப் பாவித்து இன்னும் நடந்து வருகின்றது பரிதாபமே. உண்மையில் எங்கே உயர்குலம் கீழ்குலமென யோசிக்கில் மேற்சொல்லிய குறளும் மற்றும் பெரியோர் வாக்கும் தக்கபடி உத்தரவளிக்கின்றன.

"நல்ல குலமென்றுந் தீயகுல மென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பி
னொண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை

யென்றிவற்றி னுந்தங் குலம்.'' என்னும் நாலடியார் மிகவும் கவனிக்கத்தக்கதே. ஒழுக்கமில்லாது பேதம் பாராட்டும் மாக்கள் "ஒழுக்க முயர் குலத்தி னன்று'' என்பதனை யறிந்திலர் போலும். பின்னும் உலகத்தாரால் மேற்சாதியராகக் கொள்ளப்படும் பிராமணப் பிறப்பும் ஒழுக்க மின்றேல் இழிகுலமாம். என்பதைக்காட்ட

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.'' என்றார். வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்க்கும் பிராமணர் அக்குலத்துக் கேற்பட்டிருக்கும் ஓதல் மறந்தானாயினும் பிறகு கொளலாகும். ஆனால் ஒழுக்கங் கெட்டால் மீண்டும் கொள்ள முடியாது கீழ்குலத்தராகின்றார் என்றதனால், அப்பிராமணரினும் தாழ்ந்தகுலத்தவராக எண்ணப்படுவோர் ஒழுக்கம் விட்டால்இன்னும் தாழ்ந்தவராக மதிக்கப்படுவரென்பது சொல்லாமலே விளங்கும். ஒத்துமறத்தல் கூடாது என்பது கட்டளையாக விருக்கிறதென்பதைக்காட்ட "மறப்பினும்'' என்றார். இதனை "........இன்னு ஒத்திலா பார்ப்பானுரை'' என்பதாலறிக. பின்னும் உவமானவாயிலாக ஒழுக்கமில்லாதவனுக்கும் மேன்மையில்லையெனக் காட்ட,

"அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு'' என்றார். பொறாமையுள்ளவனிடத்து செல்வம் நிலைநிற்காது. இதனை "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்'' என்பதாலறியலாம் இக்குறளை, மேற்குறட்கு மேற்கோளாகக் கொண்டால், ஒழுக்கமில்லாதவன் சுற்றமும் உண்பன உடுப்பன் வின்றி கெடும் எனக் கொள்க. ஆகவே ஒழுக்கமின்மை தன்னை மாத்திரம் கெடுக்கும். ஆகவே அவசியமில்லை எனக்கொண்டு ஒழுக்கத்தை விடுவரேல் அவர்கள் தன் சுற்றத்தாரின் வறுமைக்குக் காரணராக என்நாளும் தூஷிக்கப்படுவர். இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் கண்ணாரக்கண்டிருக்கிறோம். இதனை கருத்திலமைத்து நன்னெறி யொழுகல் பெரியோர்க்குரித்து. மேற்சொல்லிய குற்றங்களை யறிந்துதான் பெரியோர் ஒழுக்கத்தினின்று தவறுதிருக்கின்றனர் என்பதை,

"ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.'' என்பதால் விளக்கினர். இக்குறளில் உரவோர் என்பது கவனிக்கத்தக்கது. உரவோர்=மனவலியுடையோர். ஒழுக்கத்தைக் கடைபிடிப்பதில் மனவலி அதியாத்யாவசியம். இன்றேல் தவறிவிடநேரிடும். அப்படி தவறாது மனவலியுடையோர்தான் பெரியோர் அவர்கள்தான் பெருங்காரியங்களைச் செய்வர் என்பது இதன் குறிப்பர்த்தமாகும். இதனை, "செயற்கரிய செய்வர்பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்.'' என்பதனாலறிக. மேல்வேஷம் போட்டுக்கொண்டு மனவலி சிறிதும் இல்லாமல் மனதை தீயொழுக்கத்திற்கே இரையாக்கி உழலும் பெரியோர் உண்மையாம் பெரியோர் தானோ? கோவிலுக்குப் போகும்போது ஏற்பட்டிருக்கும் ஆசாரங்களைச் சிறிதும் கவனியாது பரத்தையர் சகிதமாய், பரத்தையரே தெய்வமாக்கருதி இத்திரு ஸ்தலங்கட்குச்சென்று அங்கேயும் ஓர் நிமிடமேனும் சிவச்சிந்தையில்லாது பரத்தையர்சிந்தையாயிருக்கும் பெரியர் தானோ பெரியவர்? படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோயில என்பது போல் நல்லொழுக்கங்களைப் பிறர்க்குப் போதித்து அதற்கு முற்றும் மாறாய்ச் செய்யும் பெரியவர்? தானோ பெரியவர். இவரைப்பற்றியன்றோ நாயனார்.

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப், பேதையிற் பேதை
யா ரில்." என்னும் இக்குறள் கூறினர். நண்பர் கவனிப்பார்களாக. மேற்
சொல்லிய கடைசி நான்கு குறளையும் ஒருங்குதிரட்டி

"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி." என்றார் வகுப்புக்கும் நிலைக்கும் தக்க
ஆசாரத்தை விடுவோர் பழியையும் மற்றோர் மேன்மையுமடைவர் என்பது
இக்குறளின் தாற்பரியமாகும். "நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை பல்
லவர் தூற்றும் பழியாகும் என்றார் பிறரும்" விரித்தலநாவசியமாகும். ஆசா
ரத்தைக் கொள்ளுவதாலும் விடுவதாலுமுண்டாகும்பின்விளைவையுங்காட்ட

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்." என்றார். இதனால் நல்லொழுக்கமில்லா
விடத்து அறமில்லை என்பது பெற்றாம். இங்கு அறத்திற்கு காரணம் நல்லொ
ழுக்கமெனவே தீயொழுக்கம் பாவதத்திற்கு காரணமாகும் என்றும், தீயொ
ழுக்கத்தின் விளைவு துன்பமெனவே நல்லொழுக்கத்தின் விளைவு இன்பமெ
னக்கொள்ளப்பட்டது. என்றும் என்பதால் இருமை மறுமை யிரண்டினு
மாம் ஒழுக்கமுடையவர் மறந்தும் தீயச்சொற்களைச் சொல்லார் என்பதை

"ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்." என்பதா லுணர்த்தினர். ஒழுக்க
முள்ளவர்கள் ஓர்கால் மறந்துபேசினும் அஃது நன்மைத்தருஞ் சொல்லாக
வேநிற்கும் என்பது இக்குறளில் குறிப்பாக அறியலாம். நல்ல சொற்களை
யேபேசிவந்த நா தீயச்சொல்லை சொல்லாதென்பதைக் காட்ட நாயனார் வழு
க்கியும் என்றார். வழுக்குதற்கு காரணம் சிலசமயங்களில் தீயோர் வைதலும்
காரணமாகும், பெரியோர் அப்படிபட்ட சமயங்களிலும் தீயன சொல்லார்
என்பதனை

"கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே—யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து." என்பதாலறிக. கடைசியாக கற்றவர்க
ளும் உலகத்தோடு பொருந்த ஒழுக்கங்கெடாது நடக்கக் கற்றுக்கொள்ளா
விட்டால் கல்லாதவரே யாவர் என்று,

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்." என்பதால் முடித்தார். உலகத்தோடு பொ
ருந்தநடத்தலாவது, அறநூற்களில் சொல்லப்பட்டவைகளிலே "பழையன
கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கேற்க
காலத்துக் கேற்காதவைகளை விட்டும், சொல்லப்படாதவைகளில் ஏற்பனவற்
றைத் தழுவியும் நடத்தலே. கல்விக்கு பயன் அறிவும், அறிவுக்குப் பயன்
ஒழுக்கமுமாகையால் ஒழுக்கமில்லாதார் கல்லாதவரெனக் கொள்ளப்படுவர்.
கடைசியாக சொல்லியவைகளை யெல்லாந் திரட்டி யாம் சொல்லவந்த தென்
னவோவெனில்

"பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த்—தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு." என்னும் நாலடியின் கருத்தே. பி
றர் இரகசியத்தை வெளியிடுவதில் செவிடனாகவும், பிறர்மனையாளைப் பார்ப்
பதில் குருடனாயும் கோள் முதலியன சொல்வதில் ஊமையாயும் இருப்பா

னேல் அவற்கு மற்ற அறங்கள் வேண்டியதில்லையாம். நண்பர்காள்! தயவு செய்து இதனை உய்த்துணர்ந்து நல்வழியில் நடந்து அப்படிநடத்த எல்லாம் வல்ல ஒருவனைத் துதித்து உய்வோமாக.

1. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
   முயிரினு மோம்பப் படும்.

2. பரிந்தோம்பி காக்க வொழுக்கந் தெரிந்தோம்பி
   தேரினு மஃதே துணை.

3. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
   மிழிந்த பிறப்பாய் விடும்.

4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
   பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

5. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
   ஒழுக்க மிலான்க ணுயாவு.

6. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
   னேதம் படுபாக் கறிந்து.

7. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
   னெய்துவ ரெய்தாப் பழி.

8. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
   மென்று மிடும்பை தரும்.

9. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
   வழுக்கியும் வாயாற் சொலல்.

10. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
    கல்லா ரறிவிலா தார். கோ - மு - சென்னை.

உலக புராண சாரசங்கிரகம்.

104-ம் பக்கத் தொடர்ச்சி.

தேகஞானி:—ஹே - ஆத்மஞானி "சுயகாரியம் துரந்தரா சுவாமி காரியம் வழவழா" வென்பதறியாயோ. இதுநிற்க நீ ஞானமின்று கூறும் வாக்கியங்களைக் கேட்க மனம் வருந்துகிறது. அநேக புத்திமான்கள் நல்ல நாள் தீயநாள் ஏற்படுத்தி தந்திரமந்திரங்களால் உலக விவகாரம் நடத்திக்கொள்ளாதவனுக்கு உலக வாழ்க்கையும் சிற்றின்பசுகமும் நேராது என்கிறார்களே நீர் இப்படி கூறல் எட்டுணையும் பொருந்ாதென்றனன்.

ஆத்மஞானி:—ஓ. கோ, தேகஞானி! புத்திமான்கள் தனக்கும் பிறருக்கும் சங்கடம் நேராமல் நடந்து கொள்ளுமாறு பிரபலசுருதி அல்ப சுருதி என இரண்டாகப் பிரித்து உனைபோன்ற தேகஞானமுள்ள மூடர்களுக்கு அற்பசுருதியே பிரமாணமாகவும், ஞானிகளுக்கு பிரபல சுருதியே பிரமாணமாகவும் எழுதினர். இதை நீ கவனிக்கவில்லை. "அஹிம்சா பரமோதர்மா" எனும் வாக்கியத்தின் கருத்து பிறர்மனதை நோகப்படுத்தப் படாதென்பதே. இஃதுணராது தன் மனைவி சரீரத்திலுள்ள நவத்துவார சாக்கடை தான் பிறர்மனைவிகள் சரீரத் துளதென்று

யோசியாமல் (15) தன் மனையாளைத் தனியனையிருத்தி பிறர்மனைக்கேகும் பேதைமதியினர்" எனுங் கருத்துப்படி அயல் மாதர்மீது அபிமானம்வைத்து, போதம் - தனம் - கல்வி - பொன் இவைகளைப் போக்கடித்துக் கொள்ளுகின்றனர். ஒருவற்கு வியாதிகண்டால் உடனே மருந்து கொடுத்து அவனைச் சொஸ்தப்படுத்தவேணுமெனும் அறிவில்லாமல், இன்றையதினம் கிருத்திகை, அமாவாசை மருந்து கொடுக்கப்படாது, பஞ்சாங்கத்தில் நல்லநாள் பார்த்து மருந்து கொடுக்கவேணுமென்றும் "நாள்செய்வது நல்லோர் செய்யார்" எனும் பெணமதிசாஸ்திரம் கேட்டு நோயாளியை வருத்தி மரணத்திற் காளாக்குகின்றனர். யாராவது புத்திமான்கள் (16) நலிந்தோர்க்கில்லை - நாட்டினமென்று, நலமாயோர்ந்தும், நாள்பார்த்திட்டு (17) ஔடதமீந்து, வலைவானுகினம், ஔவியமுள்ள வசடராட்சதர், எனும் வாக்கியங்களைத் தெரிவித்துத் தடுத்தால் தங்கள் வீட்டுக்காரிய குருக்களாகிய பெண்கள் வாக்கியத்தை விட வேதவாக்கியம் வேறுளதா என்று மறுத்து வியாதியில் நலிந்தோனை நமனுலகம் ஏற்றுவர்.

தேகஞானி:—பளா - பளா - நன்றாய்ச் சொன்னாய் ஆத்ம ஞானியே "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்றிருப்பதால் நான் எப்படி அவாள் வார்த்தையைக் கேளாதிருப்பது. இராமன் தாய்சொல் கேட்டல்லோ காட்டிற்சென்றான். நீ கூறும்வேதவியாஸர் தன்தாயாகிய மச்சகந்தியின் வார்த்தையைக் கேட்டு தன் சகோதரரின் பாரியைகளாகிய அம்பிகை அம்பாலிகை என்பவர்களைச் சேர்ந்து திருதராஷ்டிரன் பாண்டவர்களை உற்பத்தி செய்தார். ஆகையால் பெண் மதி கேளாதான் பேதையிலும் பேதையன்றோ! இனி அப்படி உரையாதே என்றனன்.

ஆத்மஞானி:—ஹே - மூடா! இராமன் கேட்டதும் வியாஸன் கேட்டதும் தருமவிரோதமின்றிக் கேட்டார்கள். எப்படியெனில், இராமன் தான் நாடாண்டிருந்தால் காட்டிலுள்ள துஷ்டர்களை எப்படி சங்கரிப்பது என்று ஏக்கமுற்றிருந்த சமயத்தில் "காக்கையேற பனம்பழம்விழ" என்பதற்கிணங்க வந்த தாய்சொல்லை தலைமேற்கொண்டு சென்றனன். வியாசன் தன் வீரியவிர்த்தியால் பாரதவீரர்தோன்றி பாரதம் நடக்கவேணுமென்று ஞான திருஷ்டியாலுணர்ந்து தாய் சொல்லேற்றனன். அவர்கள் தாய் மதியீன வார்த்தைகள் சொல்லின் ஏலார். நின்தாயும் மனைவிகளும் அவ்வளவு புத்திமான்களாயிருக்கின் தருமஆராய்ச்சிசெய்து சாஸ்திரோக்தமான யுக்திகளை யோதுவர். அப்படியின்றி "இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" எனும் வாக்கியத்தை மறந்து தன்சரீரம் எக்காலத்தும் அழியாது என்றும், எப்படியாவது மறைந்து வசித்தால் சாவுகிடையாதென்று நின்பெண்கள் உபதேசம் கேட்டு உனக்குரிய புருஷதர்மத்தையும் கைவிட்டு (18) "அம்மைசுரங்கள் அண்டையிலிருந்தால் - அம்மாபிழைக்க வயவிடஞ்சேர்வை, (19) "வாந்திபேதி வலிமுடக்கம்மை - வந்துபிடிக்கும் வயிற்றுக்கழிச்சல் (20) ஓடியொளித்தா லொட்டாதென்பாய் ஒட்டினபோது ஆழ்வினையென்பை" அப்போது, ஆன்றோர் நின் அறிவீனத்தைப் பார்த்து "ஐங்காதம் சென்றாலும் தன் பாவம் தன்னோடுவரும்', என்று தெரிவிப்பார்களாகில், அவரைநோ ஹே! மூடரே! "அகப்பட்டுக் கொண்டவனுக்கு அஷ்டமத்தில் சனி" ஓடியொளித்தவனுக்கு ஒன்பதாமிடத்தில் குரு" எனு

ம் வாக்கியம் அறியீரோ என்றுமிரட்டி ஓடியொளித்தால் (21) உலகிலென்றுமொழியா திருப்போம் - அலகிலாழிந்தது வறிவின்மை யென்பர்,, இப்படிப்பட்டவர்க்கு தாயினிடம் உள்ள சந்தைவிட தங்கள் பருத்ததேகம் பிடிக்கும்படி (22) தாய்வயிற்றிற் புக சந்துண்டாகில் போயிருந்துய்வர் பொய்யுலகோர்கள். “இறந்தனபிறக்கும பிறந்தனவிறக்கும்” தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்” எனும் பட்டணத்தடிகளிட அருள் வாக்கியத்தையும் மறந்துபேசுகின்றனை என்றனன்.

தேகஞானி:—ஹே! ஆத்மஞானி! தேகாபிமானம் விட்டவன் இவ்வுலகில் ஏன்வசிப்பான், ஏன்தின்பான், ஏன்உடுப்பான், ஏன்மற்றவிஷய போகங்களை அனுபவிப்பான். பொய்யாக தேகாபிமானம் விட்டேனென்று வாயால்சொல்லிக்கொண்டு தங்கள் மனப்போனபடி அநீதிவாக்கியங்களை எழுதிக்கொண்டு, என்போல் புத்திமான்கள் எப்படி தேசாபிமானம்விட்டை, காண்பியென்றால் காட்டவகையின்றி, ஓடிப்போய் காடுகுகைகளில் ஒளித்துக் கொண்டும், ஊரில் வசிக்குப்போது பயித்தியக்காரனைப்போல் திரிந்துகொண்டும், ஏமாந்தவன்காதில் ஏடாகூட உபதேசம்செயகின்றவரைப் பெரியோரென்றும் அடியார்களென்றும் பகட்டான வார்த்தைகள் கூறுகின்றனை என்றனன்.

ஆத்மஞானி:—அடா பாதகா! நன்குகூறினை! நன்குகூறினை! “ஞானமும் கல்வியும் நவின்றநூல்களு மீனருக்குரைத்திடி விடாதாகுமே” எனும் வாக்கியம் இப்போது மெய்யாச்சுதே, “எல்லாப்படியாலு மெண்ணினுலிவ்வுடம்பு - பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை - நல்லார் - அறிந்திருப்பராதலினு லாங்கமலநீர்போல் - பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு” எனும் வாக்கியப்படி அவாள் தேகாபிமானம் விட்டிருப்பது உண்மை, உலகில் வசிப்பதும், உண்பதும், உடுப்பதும் தாங்கள் உணராமல் அனுபவிக்கின்றனர். எப்படியெனில் தூக்கத்திலிருக்கும் ஒருசிறுவனை எழுப்பி உண்பித்து மறுபடிதூங்கச்செய்து மறுநாள் காலையில் அச்சிறுவனை நோக்கி இராத்திரி என்னஉண்டாய் என்றுகேட்டால் நான் ஒன்றும் உண்ணவில்லை என்பன். இதுபோல் பெரியவாள் அனுபவிப்பர். இஃதன்றி நீ அடையும் பெண் போகத்தைப்பற்றி உன்னை விசாரிக்கில் அதில் நீ அடைந்த சிற்றின்ப சுகத்தைச் சொல்ல வகையில்லாமல் நீ முழிப்பது உனக்குத் தெரிய வில்லையா? நின்போல் மூடர்கள் ஞானிகளைப்பழித்து அவர்களிட அனுதிபாபத்தைப் பங்கிட்டுக் கொள்ளவேணும். புத்திபான்கள் அவரைப்புகழ்ந்து அவரிட புண்ணியத்தைப் பகிர்ந்துகொள்ளவேணும். இப்படிசெய்தால் “இருள்சேர் இருவினையுஞ் சேராவிறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு” என்றபடி ஞானிகள் பரிசுத்தமாகின்றனர்.

தேகஞானி:—அப்பா! இதேது! கேட்கக் கேட்க விந்தையா யிருக்கிறது “கருப்புக்கு இருந்துபிழை, கலகத்திற்கு ஓடிப்பிழை என்றபடி ஓடியொளியாமலும் பாடுபடாமலும் இருந்தால் என்வாய்க்குள் சோறுவந்து புகும்போலிருக்கிறதே நல்லபுத்திமான்தான் என்றனன்.

ஆத்மஞானி:—ஹே! மூடா! புத்திமான்கள் இகபரசுகமடைய கஷ்டப்படுப்போது “உள்ளது போகாது இல்லது வாராது” என்று அவர்களுக்கோதி நீ தவறுவது நன்மையல்ல. “(23) உள்ளதொழிய யொருவர்க் கொருவர் எள்ளளவேனு மீந்திலர் நன்மை (24) வாராது வாராவலி செய்திடி

னும் - வருவதுபோகா வழித்தழித்திடினும் (25) என்னுமொழிகளை யெறிரிக்கோதுவர், தன்னிடமனதிற் றட்டலைந்திடுவர், என்றபடி பேராசையுற்றலையாமல் "கிடைத்தளவு திருப்தியடையா னாதடாகாளம், கிழ்மகன் மெய்யறிவிலா னாதடாகாளம் - என்பதைக் கண்ணுற்று நீ படும்பாட்டை நிஷ்காமியமாய்ப்படில் வாயில் சோறு தானாய்வந்துபுக சந்தேகமில்லை. என்றுணர்வீராக.

பு. ஜயராம்பிள்ளை.
ஆத்மநேசன்,

மஹா காசிப முனிவர்.

இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்குமுன் அக்கினியை வழிபடும் ஜாதிலர் என்னும் ஓர் வகுப்பினர் உருவிலாவனத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மஹா காசிப முனிவர் ஆசாரியராக விருந்தார். பாரதகண்டமுழுதும் காசிபமுனிவர் பேர்பெற்றிருந்தார். அவர் ஞானத்தில் விசேஷமாக சிறந்தவராகவும், சிறந்த அத்தாட்சியாகக் கொள்ளப்பட்டவராகவும், பிரக்கியாதிப் பெற்றிருந்தார். ஜாதிலர்காசிபரிடம் பகவன் புத்தர்சென்று, காசிபரே! நீர் வணங்கும் அக்கினி வைத்திருக்கப்பட்ட அறையில் நான் ஒரு இரவு வாசஞ்செய்யும்படியாக உத்தரவு கொடும் என்றார். புத்தர்பிரானுடைய முகவிலாசத்தையும், கம்பீரமான பார்வையையும் பார்த்த காசிபர், தனக்குள் எண்ணிக்கொண்டதாவது. "இவர் ஒரு சிறந்த முனிவராகவும், மஹத்துவம்பெற்ற ஆசிரியராகவும் இருக்கின்றார். தெய்வீக அக்கினியை வைத்திருக்கும் அறையில் இவர் தங்குவாராகில் கொடிய நாகம் இவரைத்தீண்டி இறந்து விடுவாரே" என்று நினைத்து பகவனைநோக்கி "நீர் தெய்வீக அக்கினியை வைத்திருக்கும் அறையில் தங்க எனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை, ஆனால் அந்த அறையில் நீர் தங்குவீராகில், அவ்விடத்தில் வாசஞ்செய்யும் நாகேந்திரன் உம்மைக்கொல்வது திண்ணம். அப்படிக் கொல்லப்படுவதைப்பற்றி விசனப்படுகின்றேன்" என்று சொன்னார். நம்மகதேஸ்வரன் அவர்சொன்னதற்கு பயப்படாமல், தனக்கு உத்தரவளிக்க வற்புறுத்திக்கேட்கவே, காசிபர் தெய்வீக நெருப்பு இருக்கும் அறையில் பகவனைத்தங்கும்படி விட்டார். பகவன் அந்த அறையில் எச்சரிக்கையுடன் திவ்வியாசனங் கொண்டிருந்தார். அன்றிரவில் அக்கொடிய பாம்பு விஷாக்கினியை வீசிக்கொண்டு அந்த அறைமுழுதும் அக்கினிச் சுவாலையை வீசும்படியாக பகவனை சீறித்தாவியது ஆனால் நம் ஜகந்நாதன், சலனமற்று ஆசனத்திருக்கவும், பாம்பின் கொடியதீ அதனையே பஸ்மீகரப்படுத்தியது. கொடிய நாகம், தன் சுவாலையே தன்னை வருத்தியதால் தானே கொலையுண்டது.

காசிபர் தன் அறையில் தீபம் பிரகாசிப்பதைப் பார்த்து, அந்தோ "இதென்ன கொடுமை! கௌதமசாக்கிய முனிவரின் முகம் திவ்விய அழகைப் பெற்றிருக்கின்றதே! ஆனால் கொடிய நாகம் கொன்று விடுமே" என்று பரிதபித்தார். சூரியன் உதயமானான். போதிச்செல்வன் ஆசனத்தை விட்டெழுந்தார். காசிபர் வணங்கி நின்றார். பகவன் இறந்துபோன பாம்பின் உடலை, வணங்கி நிற்கும் காசிபருக்குக் காட்டி "அதன்தீ அதனையே கொன்றது" என்றார் காசிபர் தனக்குள் ததாகதருடைய ஆற்றலை மதித்து, "இந்த சாக்கையமுனி சிறந்த ஓர் ஸ்ரமணர், மிக்க ஆற்றலையுடையார் ஆனால் என்னைப்போல பரிசுத்தமானவரல்லர் என்றார். சிலகாலம் உருவிலா வனத்தில் பகவன் புத்தர் தங்கியிருந்தார்.

அந்நாட்களில் ஓர் திருவிழா கொண்டாடுங்காலம் வந்தது. காசிபர் பின்வருமாறு தனக்குள் எண்ணுவா ராயினார் "இம்மஹா சாக்கிய முனிவ ரிவ்விடந் தங்கியிருந்தால், திருவிழாவைப் பார்க்க நாலாபக்கங்களி லிருந்து வரும் ஜனங்கள், இவரைக் காணுவார்கள் அவர்களுக்கு இவர் உபதேசிப்பா ராயின், இவரை நம்பி என்னைக் கைவிடுவார்கள் என்று பொறாமை கொண் டார். திருவிழாநாள் வந்தது காசிபர் அடைந்திருக்கும் பொறாமையை அறி ந்த பகவன் அவரிடம் போகாமல் உருவிலா வனத்தைவிட்டு நீங்கினார். காசி பர் திருவிழா நடந்தேறிய பிறகு, பகவனிடம் சென்று "சாக்கைய முனிவர் என்னிடம் ஏன் வரவில்லை என்றார். ததாகதர் அவரை நோக்கி "ஓ காசிபா! நான் விழாவுக்கு வாராமலிருந்தால் உனக்கு நன்மையா யிருக்குமென்று கரு தாயா?" இதைக்கேட்ட காசிபர் ஆச்சரியமடைந்து "இச்சாக்கைய முனி வர் ஓர் சிறந்த மஹான். ஆனால் என்னைப்போல பரிசுத்தரல்லர் என்று தன க்குள் எண்ணினான். பகவன் பின்வருமாறு காசிபருக்குச் சொல்லலுற்றார், "காசிபா! நீ உண்மையைப் பார்க்கின்றாய். ஆனால் பொறாமை உன் உள்ளத் தில் குடிகொண்டிருப்பதால்.

தொடர்ச்சி உண்டு.

க. அ. பட்டாபிராமன்.

சித்தாந்தப்பிரகாசம்.

(103-ம் பக்கத்தொடர்ச்சி.)

பசுவிலக்கணம் ஆன்மவர்க்கமானது எண்ணரியதாய் அழியாததாய் ஆணவமலத்தினாலே மறைப்புண்டு அந்தமலம் பக்குவமாதற்குப் புண்ணிய பாவங்களுக் கீடான வுடம்பை முதல்வன் காருண்ணியத்தினாலே பொருந்தி அஃறிணை உயர்திணைகளாய் அவ்வுடம்பினாலே எண்ணிறந்த போகங்களைப் புசிக்கிற வழியாலே மீண்டும் புண்ணிய பாவங்களை ஆர்ச்சித்து இறத்தல் பிறத்தல்களை யுடையதாய் அநாதியிலே தாமிரகாளிதம்போலப் பொருந்திய மலத்துக்கும் பாகம்வந்தவிடத்துத் தீட்சையினாலே தனக்குள்ளே விளங்கு கின்ற சிவஞானத்தாலே அந்தமலத்தைப்போக்கி முதல்வன் திருவடியைப் பொருந்தும்.

இத்தன்மையான பலபிறவிகளிலே பிறந்தும் இறந்தும் சிவானுகூலத் தாலே புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றின் பலன்களை அனுபவிக்கு மிது சகலாவத்தை. இனி முற்பவங்களிலே சுகதுக்க பலன்களை நுகரு நுகர் ச்சியிடத்திலே ஆகாமியமாய்வந்தேறியசஞ்சிதமும், புசிப்புத்தறுவதாகவந்த பிராரத்தமும், இப்பிராரத்தம் புசிக்குமிடத்தேறிய ஆகாமியமுமாய் நீங்கா மல் முற்செனனங்களிலே பொருந்திய புண்ணிய பாவங்களாகிய இரண்டின் பிரயோசனங்களையும் ஒருகாலத்திலே ஒருவன் புசிக்கும்படி வீட்டினைத்தரு கின்ற சிவதன்மங்களாலே அக்கன்மமெல்லாம் பக்குவத்தாலே துலையொக் கச் செவ்வாதலைப் பொருந்து மிடத்தில் இருவினையொப்பு வருமுன்னெல் லாம் ஆன்மாக்களை ஈடேற்றுகைக்குத் தனக்கில்லாத கோபத்தை பொருந்

திய திரோதான சத்தியானது கிருபையாகா நிற்க அப்பொழுதே நன்றான சத்திநிபாதகுறி விளங்கும்.

சத்திநிபாதமாவது மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என நான்கு பாதமா யிருக்கும், அந்த நான்கினுள் பொருந்து முறைமையைக் கிளத்தற்கரிய தீவிரதரமான ஞானபாதமானது பொருந்தப்படு மவர்க்கு நிலைபெற்ற ஞானக்கூத்தன் ஒப்பற்ற குருமூர்த்தங் கொண்டு அறியப்படும் பொருளா யெழுந்தருளி வந்து மயக்கமிகவுண்டான கேவலத்தையும் விகற்பமிக வுண்டான சகலாவத்தையு முண்டாகாதபடி அருளிலே நிறுத்தி மலங்களைப் போக்குவன். இது நிலைமை நிறைந்த சுத்தாவத்தை.

சந்திநிபாதமாவது சென்மாந்தரங்களிலே செய்யப்பட்ட சிவதன்மங்களினாலே ஆன்மாக்களுக்குக் கன்மசமமும், பரிபாகமுண்டான வளவில் சிவசத்தி பதிதல். கன்மசமுத்துவமேயன்றி மலபரிபாக மில்லாதபோது சிவசத்தி அந்தவினை யிரண்டினையும் சேதித்து விஞ்ஞானகலப் பிராத்தியாக்கு மெனவறிக. கன்மசமத்துவமின்றி மலபரிபாக முண்டானாற் கன்மங்களாற் பலமில்லை. பாதமென்பது நான்கிலொருகூறு. சத்திநிபாதங்களாற் பயன் சரியை முதலிய பாதங்களிலே நிறுத்தி மனவாக்குக் காயங்களைச் சுத்தமாக்கி ஞானத்துக்கு யோக்கியனாகப் பண்ணும். இவற்றுள்:—

மந்ததரமாவது இலிங்கமாகேசுர ரிடங்களிலேபத்தியுண்டாகஅதனாலே பரமசிவன் சாதகாசாரியனை யதிட்டித்துச் சமயதீட்சைபண்ணி அவன் மனமொழி மெய்களைச் சரியைத் தொழிலிலே புரிவிப்பன். இச்சரியையின் முற்றுதலாலே மந்தசத்திநிபாத முண்டாயச் சிவார்ச்சனையால் ஆதரவுண்டாகிப் போதகாசிரியனை யதிட்டித்து விசேட சமயமுடித்துச் சிவார்ச்சனைகற்பித்து அந்தரியாக பகிரியாகங்களிலே அவன் மனமொழி மெய்களைப் புரிவிப்பன். இக்கிரியையின் முற்றுதலாலே தீவிரசத்திநிபாத முண்டாக யோகவாஞ்சையுண்டாய் அவ்வாசிரியனால் அட்டாங்கயோக வுண்மையை யறிவித்துக்காமாதி யறுவிதமும் விடுத்து அவன் சித்தத்தைத் தியானத்திலே நிறுத்திச் சமாதியிலே யொடுக்குவன். இம்மூன்றின் முற்றுதலாலே தீவிரசத்திநிபாத முண்டாய்ச் சிவஞானிக ளிடத்திலே பத்தியும் திரிபதார்த்த சொரூபம் அறியவேண்டுமென்னு மறிவுந் தோன்றும். தேகாதி பிரபஞ்சங்களை நீக்கவேண்டுமென்னும் வைராக்கியமும் முத்தியிலாசையும் பிறவியிலே பயமும் இகலோக பரலோகத்திலே வெறுப்பும் நமக்கிந்த கவர்ச்சியை நீக்கிச் சிவரூபத்தைத் தரிசிப்பிக்கு நாதராவாயாரென்று,பசித்தவன் அன்னதாதாவைத் தேடுமாறுபோலவும், பிறவிக்குருடனான அநாதன் கோடைகாலத்தின் மத்தியானத்திலே நீர் தேடித்திரியுமாறு போலவும் ஞானசாரியனைத் தேடி மிகவும் வருந்துகின்ற வாஞ்சையுண்டாம். இந்தத் தீவிரதர சத்திநிபாதமும் தாரதம்மியத்தினாலே மந்ததரமாதியாக நான்காம். இந்நான்குவித சத்திநிபாதமுடையவர்கள் ஞானசாரியனை அடைந்துள்ளளவில் அவ்வாசிரியனாலே

பரமசிவன் ஞானதீட்சையைப் பண்ணி அவர்கள் மலத்திரயங்களைச் சேதித்துக் காரண சூனியம் பிறப்பித்து ஞானனந்தானுபூதியைக் கொடுப்பன்.

ஆன்மாவானது கன்மத்திற் கீடாகப்பொருந்தின சரீரத்துள்ளே நிலைபெற்றுப் புசித்தற்கு யோக்கியமான விடயங்களை இந்திரியங்களாலே கண்டு அந்தக்கரணங்களாலே கிரகித்து வித்தையினலே அறிந்த அவ்விடயத்திலே அழுந்திச் சுகதுக்கங்களை அனுபவியா நிற்கும். அறியுந்தன்மையை அறிவிக்குந் திருவருளும் புசிப்பிக்குஞ் சாதனமான கருவிகளும் போக்கியத்தின் வரலாறுமான இவற்றில் ஒன்று மறியாது. கருவிகளைப் பிரிந்த அடைவாகச் சாக்கிரமுதலிய அவத்தைகளிலே மிகுத்த ஆணவமலத்தாலே மறைப்புண்டு அவத்தைப்படுகின்ருே மென்னும் தன்மை தெரியாமல் அழுந்தும். இந்தக் கருவிகளெல்லாம் நீங்கி ஆணவமலநீங்காத ஏகாந்தமான அதீதாவத்தை அவ்வான்மாவுக்கும் பெத்தத்தில் உண்மையாகும்.

உடம்பானது அவத்தையிலும் மரித்தபோதிலும் உணர்ச்சி யில்லாத சடமாகையாலும், சோத்திராதிக ளைந்தும் தத்தமக் காதாரமாகிய பூதங்களையும் பொருந்திநின்று ஒவ்வொரு விடயங்களாக ஐந்தையும் அறிகையாலும் அந்தக்கரணங்கள் தங்களிற்கூடி பற்றிநிச்சயித்து அகங்கரித்துச் சிந்தித்து இந்திரியங்கள் தத்தம் விடயங்களைப் புசிக்கையாலும், பிராணவாயு அவித்தையை அறியாதிருத்தலாலும் வீணைக்கிடாக வெடுத்த தேகத்திலே ஆன்மாவானது முதல்வன் கூட்டியருளின கலாஞானத்தாலே அறியும்.

இன்னும்வரும். சித்தாந்தசரபம்.

ராமகிருஷ்ண 'தென்னிந்தியகவி'

தொட்டக்காடு இராமகிருஷ்ணபிள்ளை யென்பவர், 1855-ம் வருடம் செங்கற்பட்டில், தன்தாயை யீன்ற தகப்பனர் வீட்டில் பிறந்தார். அவருடைய தாயோடும், தந்தையோடுஞ் சம்பந்தப்பட்ட முன்னோர்கள் மிக்க பிரசித்திபெற்றவர்களா யிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் தன்னுடைய அளவிறந்த ஞாபக சக்திக்குப் பேர் பெற்றிருந்தார். அவர் ஆர்காட் நவாபினிடத்தில் வேலையமர்ந்திருந்தார். ஒருகாலத்தில் ஷை நவாப் அவருடைய அதிஆச்சரியகரமான ஞாபகசக்தி (Rezzofauti) என்பவரின் சக்திக்கு இரண்டாவதாக விருந்திருக்கலாம். தான் தலைவனயிருந்த கிராமத்தின் பெரிய கணக்குகளை உடனே முடித்துக்காட்டும்படி ஷை நவாப் கேட்க, தான் ஒரு நிமிஷமேனுந் தாமதியாமல், தான் வைத்திருந்த பனை ஓலைகளினலாகியபுஸ்தகத்தின் ஏடுகளை ஒன்றின்மே லொன்ருகத் திருப்பி யாவரும் அதிசயிக்கத்தக்க அவ்வளவு விரைவில் ஷை நவாபும் அக்கணக்குகளைக் கண்டு திருப்தியடையுமாறு எழுதிக்காண்பித்தார். அது எழுதாதவெற்று ஓலையின் தொகுதியாகக் காணப்பட்டது. நவாப் இவருடைய அதி தீவிரசக்தியைக் கண்டு அளவில்லா ஆச்சரியமடைந்து, அவர் இணையில்லா சக்தியை மிகவும் மெச்சினர். அதுமுதல் "வெற்று ஓலையுடைய ஆண்டையபிள்ளை" (*Andia Pillay*)

யென்று அழைக்கப்பட்டார். இந்த ஆண்டைய (*Andia Pillay*) பிள்ளையின் பேரனும் ஒருபக்திமான். அக்காலத்தில் எழுதப்பட்ட பாடல்களெல்லாம் இவரைப்பற்றி எழுதப்பட்டன. இவர் கற்றோருக்குப் பெரியசிநேகிதர். இவர் இந்து இராஜாக்கள் காலத்தில் ஒரு கோட்டைக்குள்ளிருந்த விஷ்ணு கோவிலை ஈஸ்ட் இந்திய கம்பெனி (*East India company*) யார் காலத்தில், அக்கோட்டையினின்று அது இவரால் வெளியே எடுத்து வைத்தார். அதுமுதற்கொண்டு, அதை எல்லா பக்தரும் தொழுகிறார்கள். அக்கோவிலுள் எழுதப்பட்டுள்ளவையே இதற்குச் சாட்சி. அவருடைய குடும்பத்தில் ஆங்கிலேயருக்குக் காட்டிய இராஜவிசுவாசம் மிக்க சிறந்தகுணமா யிருந்தது. பிரசித்திபெற்ற (*Ananda Rannoao*) என்பவருடைய குடும்பத்தில் விவாகம் செய்ய அவரை வேண்டினார்கள். அதற்கு அவர், அந்த குடும்பர் (*Dupleix*) டூப்லேய்க்கு துபாஷாகவும், அல்லது மந்திரியாகவு மிருந்தபடியால், தனக்கு அக்குடும்பம் வேண்டாமென்று தள்ளிவிட்டார். அக்காலத்தில் இங்கிலீஷ் காரரோடு போர்புரியும் சத்துருக்களான பிரான்சு காரருக்குட்பட்ட குடும்பம் என்ற விஷயந் தான் தன்னை விவாகஞ் செய்யாமற் றடுத்ததென்பது அவருடைய அபிப்பிராயம். ஆயினும் பிரான்சு காரருக்கும் இங்கிலீஷ்காரருக்கும் பின்பு சமாதான உடன்படிக்கை நடந்தபிறகு, இவருடைய விவாகம் நிறைவேறினது. கனம் இராம கிருஷ்ண பிள்ளையின்தாயை யீன்ற பாட்டி ஜெனரல் ஜோசப்ஸ்மித் (*General Joseph Smith*) என்பவருக்குத் துபாஷா யிருந்த வரதா பிள்ளை (*Varada Pillay*) யின் பேத்தி தன் இளம பருவத்தில் கனம் இராமகிருஷ்ணபிள்ளை அச்சீமாட்டியால் வளர்க்கப்படும் பாக்கியத்தைப் பெற்றார். அச்சீமாட்டி, தென்னிந்தியாவின் நிலைமை யின்னதாகுமென்றறியக்கூடாத அக்காலத்தில், தென்னிந்தியாவின் சரிதையை, இனி விர்த்திக்கு வரப்போகிற இக்குழந்தைக்குக் கூறினார்கள். கனம் இராமகிருஷ்ணபிள்ளையின் தந்தையின் முன்னோர்களும், இப்படியே புகழ்பெற்றவர்கள். அவர்கள் பெரிய நிலங்களை வைத்திருந்தார்கள். அவர்களுடைய பெருமையைக் காட்ட தொட்டக்காடு என்னும் பிறப்பிடமே சாட்சியாகும். தங்களுக்கு அவமானம்வராமல்காப்பது தங்களுயிருக்கு மேலானதென்று எண்ணினவர்கள். அவர்களுள் ஒருவர், தன்னுடைய அழகிய சகோதரியை ஒரு பாளையகாரர் தூக்கிக்கொண்டுபோகஆயத்தஞ்செய்திருக்கிறாரென்று கேள்விப்பட்டவுடன் தன் சகோதரியை கொன்றுவிட்டார். இவ்வாறு தன் குடும்பத்திக்கு அவமானம் வராமல் காத்துக்கொண்டார். இதுதான் பின்பு பாளையக்கார் குடும்பத்துக்கும், தொட்டக்காடு குடும்பத்துக்கு முண்டான கலகத்துக்குக் காரணம். இவ்வாறுகீர்த்திப்பெற்ற குடும்பத்தில் தோன்றிய கனம் இராமகிருஷ்ணபிள்ளை கல்வி அடையும் பொருட்டு 1866-வருடம் சென்னை கிறிஸ்துவ கலாசாலையைச் சேர்ந்தார். அதில் தன்னுடைய விடாமுயற்சியினும் நன்னடக்கையினும், தன் உபாத்தியாயர், முக்கியமாக டாக்டர் மில்லர் துரையின் சன்மானத்தையும், விருப்பத்தையும் பெற்றார். அவர் 1869ஆம் மெட்ரிகுலேஷன் வகுப்பில் இருந்தார். சென்னைக்குக் கவர்னராயிருந்த லார்ட் நேப்பியர்

அந்த கலாசாலையைச் சுற்றிப் பார்த்து வரும்போது, மாணாக்கர்களுக்குச் சிலகேள்விகளைப்போட்டார். அப்போது இராமகிருஷ்ணபிள்ளை தந்தவிடையைக்கண்டு மிக்க ஆச்சரிய மடைந்து மிக்க ஆவலோடு அவரைத் தட்டிக்கொடுத்து இச்சிறுவனுக்கு தன் வயதுக்குத் தெரியவேண்டியதற்கு மேற்பட்ட விஷயங்கள் தெரிகிறது என்றார். பிறகு அந்த கவர்னர் எதிரில் பார்த்திருந்தபடியே ஆனார். தான் 21-ம்வயதில் B. A. பரீட்சையில் தேறினார். 1867—1877 வருடங்களில் சீதையும் இராமனுமென்ற ஒருபாடல் வெளியிட்டார். இதுதான் அவர்செய்த முதல்நூல். தன்னுடைய முதல்பாடல்களை மிக்க அன்போடு படிக்கிறார்களென்பதைக் கண்டு, மிக்கஉற்சாகங்கொண்டு டேல்ஸ் ஆப் இன், என்னு மற்றொரு இங்கிலீஷ் பாடலை வெளியிட்டார். இதற்குமுகவுரை எழுதினது டாக்டர் மில்லர் துரை. இந்த புஸ்தகம் சமஸ்தான வித்துவானுயிருந்த லார்ட் டென்னிஸன், என்னும் இங்கிலீஷ் சமஸ்தான வித்துவான் அபிப்பிராயத்துக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அதை மிக்க இன்பமானதும், அதிக சிறந்ததுமானபாடலென்று அதினுடைய குணத்தை வெளிப்படுத்தினார். அப்பாடல்கள் தங்கள் போக்கு நடைஇவற்றினால் இந்தியர்களால் செய்யப்பட்ட இங்கிலீஷ் பாடல்களுள் தலைமை வாய்ந்தது. இவ்வளவு சிறப்புப் பெற்றிருந்ததனால் இங்கிலீஷ் நாட்டிலுள்ள பத்திரிகைகளெல்லாம் தங்களால் இயன்றவளவு புகழ்ந்தன. தற்காலத்திலுள்ள சமஸ்தான வித்துவானான ஆஸ்பிடர் ஆஸ்டின் என்பவரும் இவர்பாடல்களைப்பற்றி மிகவும் புகழ்ந்துபேசினார். கனம் இராமகிருஷ்ணபிள்ளை இப்போது 'தென்னிந்தியாகவி' என்றழைக்கப்படுகிறார். இவருடைய டேல்ஸ் ஆப் இன்ட், என்னும் புஸ்தகம் அவ்வாறு இவர்புகழை நாட்டுகையில் 'இந்தியாவின் கிராம வாழ்க்கை' என்னுமோர் புத்தகத்தை வசனநடையில் எழுதினார். தான்கிராமத்தில் வசிக்காவிடினும், இப்புத்தகத்தில் கிராம வாழ்க்கையை, இதர ஊராரும் அறியுமாறு அவ்வளவு தெளிவாகவும், அழகாயும், எடுத்துக் காட்டியிருக்கிறார். இதைக்குறித்து கிரான் டப் என்பவர் இவ்விதமாக முகவுரை எழுதுகிறார். "தென்னிந்தியா சுதேசி இப்படி கீர்த்தி பெற்றிருப்பதைக் காண எனக்குமிக்க இன்பத்தைத் தருகிறது." சென்னைக்குமுன்பு கவர்னராயிருந்த சர் ஆவ்லாக் ஆதர் இவருடைய கல்வி சாமார்த்தியைப் பற்றி கேள்வியுற்று இவரை அழைத்து மிக்கபட்சமாய் பேசினார். இப்படி இவ்விருவரும் சந்தித்தபிறகு சென்னை சர்வகலாசாலைத் தோழராக நியமிக்கப் பட்டார். இவர் எழுதினது பத்மினி என்னும் மற்றொரு சிறந்தவசனநூல். இதற்குமுகவுரை டாக்டர் பிரைஸ் என்பவர், எழுதியிருக்கிறார். இந்த புத்தகம் இங்கிலாண்டிலும், இங்கேயும், மிக்க அன்போடு ஏற்றுக்கொள்ளப் பட்டது. இங்கிலீஷ் பத்திரிகைகள் கனம் இராமகிருஷ்ண பிள்ளையைப்பற்றி எழுதுகையில் பின்வருமாறு எழுதுகிறது. நம் வீடுகள்தோறும் புகழ்ந்துபேசப்படுகிற பேர்களைவாய்ந்த இரண்டுகனவான்களால் எழுதப்பட்ட புத்தகம் வெளியானதை அறிவிக்க மிக்க இன்பத்தைத் தருகின்றது. பத்மினி என்னும் இந்தியாகதை 16-ம் நூற்றாண்டின் இறுதியில் விஜயநகர ராஜாங்கம் அழிந்தகால

த்தில் இந்தியாவில் நிகழ்ந்த ஒரு விஷயத்தைக் குறிக்கின்றது. நம் ஆக்கியோன் இக்கதையின் உண்மையை அறிந்து அவற்றை மேலான நடையில் எழுதியிருக்கிறார்.

இராஜர்வின் பட்டாபிஷேகம் நடந்தபோது பூலோகத்திலுள்ள எல்லாவிடங்களிலிருந்தும் தங்கள் இராஜ விசுவாசத்தைக் காட்டி பாடல்கள் செய்தார்கள். அவைகள் 69தான் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மற்றும் இங்கிலீஷ் பத்திரிகைகள் இராமகிருஷ்ணரின் பாடல் மேலானவைகளில் ஒன்று என்று எழுதப்பட்டிருக்கிறது. இன்னொருபத்திரிகை, "சென்னையில் இந்துக்களால் எழுதப்பட்டு வெளியான, பட்டாபிஷேகப் பாடல்களெல்லாவற்றிலும் மேலானது. பிழையில்லாமலும், சுய அபிப்பிராயமுடையதுமானபாடல். அப்பாடல்க்ளுக்குரியபுகழைநாம் எடுத்துச்சொன்னோம்" என்றெழுதினது. இராமகிருஷ்ணபிள்ளை ஐகோர்ட்டில் இன்டர் பிரிடராக விருக்கிறார். சர்வகலாசாலை பரீட்சைகளில் அக்கிராசனாதிபதி. கிறிஸ்தவ கலாசாலைதினம் கொண்டாட்டத்திற்காக மிக்க சிரத்தை எடுத்தார். மில்லர் துரையின் சிலையை நிறுத்த, தன் சிநேகிதருடைய உதவியோடும், ஷெகிறிஸ்தவகலாசாலையின்மாணுக்கர்களின் உதவியோடும், தானும் மிக்க கஷ்டமெடுத்துக் கொண்டார். எழும்பூர் பூனமலிரோட்டில், 'தொட்டகாடு வீடு' என்னும் வீட்டில் குடியிருக்கிறார். இதில் மிக்க ஆடம்பரமில்லாமலும், நல்ல சிந்தையோடு மிருக்கிறார். மதத்தால்வைஷ்ணவர். செங்கற்பட்டு ஜில்லாவில் பிறந்தவர். அவருடைய புத்தகங்களிலெல்லாம், தன் ஊரின்காட்சியும், இடங்களின் காட்சியுமேவர்ணித் தெழுதப்பட்டிருக்கின்றன.

பத்—ர்.

களவழிநாற்பதுரை.

(96-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா ளெதிர்த்தோடித்
தாக்கி யெறிதர வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே
ஆர்த்தம ரட்ட களத்து.

(பொ-ரை) போரில் (வல்ல) கொடிப்படையையும், (கரையோடு) மோதும் காவிரிநீர் நாட்டையுமுடைய செங்கட்சோழன் கொக்கரித்து (பகைவரைக்) கொன்ற போர்க்களத்தில்; ஆரவாரமிகுந்த போரில் ஆளும் ஆளும் எதிர்ச்சென்றோடி பொருது, ஆயுதங்களை வீசுதலாற் சொரியாநின்றவொள்ளியவுதிரம் கார்த்திகை விழாவின் மிக்க விளக்கினை யொத்தன.

(வி-ம்) மற்றகாலங்களைவிட கார்த்திகை உற்சவத்தில் வீட்டினெப்புறங்களினுமிக்க விளக்கேற்ற லுலகக்காட்சியாகலின், அதுபோன்று மேற்சொல்லிய போர்க்களத்தில் ஒருவரை யொருவர் நெருங்கி ஆயுதங்களாற் குத்த அவ்வாயுதங்கள் நுழைந்தவிடங்களி னின்றும் ஒழுகியவுதிரம் அக்கினியைப் போன்று செந்நிறம் பெற்றிருந்ததென்க. கார்திகை விழாவி லெங்கெனும்

பலவிளக்குக ளேற்றுவதுபோல போருட்புகுந்தவர் தேகமெங்கு மாயுதங்க ளுழைந்தவ்வழியெங்குஞ் சென்னிற மொழிகி நின்றதென்க. 17

நளிந்த கடலுட் டிமிறிரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்கும்—தெளிந்து
தடற்றிடங் கொள்வாட் டளையவிழுந் தார்ச்சேய்
உடற்றியா ரட்ட களத்து.

(பொ-ரை) விளங்கி உறையினது இடத்தி லடங்கும் வாளையும், கட்டவிழ்ந்த மாலையையுமுடைத்து, இளமைப் பருவத்தையுமுடைய செங்கட்சோழன் தன்னைக் கோபிக்கச் செய்தவரைக்கொன்ற போர்க்களத்தில்; அகன்ற கடலில் தோணியையும், அலையையும்போல எவ்விடத்தும் பட்டவருடைய பிணக்குப்பையை உதிரவெள்ளம் இழுகிற்கும்.

(வி-ம்) செங்கட்சோழனது போர்க்களத்தில் பட்டவர்களுடைய வுடலினின்றும் வெளிப்படும் உதிரம் கடலைப்போல அலைத்துக்கொண்டு இருக்கிறதாகவும், அவ்வுடல்கள் அக்கடலின் மீது மிதக்குந் தோணிகள் போல அலைக்கப்படுவதாகவுங் கொள்ளப்பட்டது. 18

இடைமருப்பின் விட்டெறிந்த வெஃகங்கான் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோற்றி—நடைமெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து.

(பொ-ரை) நீர் நாட்டையுடைய செங்கட்சோழன் போரிற் புகுந்து பகைவரைக்கொன்ற போர்க்களத்தில்; (யானைகளின்) கொம்பினடுவே விட்டெறிந்தவேலின் காம்பு குளித்தலால் அவ்வேலின் கடைமணி விளங்கயானைகளெல்லாந் தோன்றி நடைதளர்ந்து மூன்று கொம்புகளை யுடைத்தன போன்றன.

(வி-ம்) அதாவது செங்கட்சோழனது கையினின்றும் வெளிப்பட்ட வேல்கள் பகைவர் யானைகளினது இருகொம்புகளி னடுவேயூன்றி அவ்வேலின் கைப்பிடி தெரிதலானது அவ்வியானைகள் மூன்று கொம்புகளை யுடைத்தனபோன் றிருந்தனவென்க. 19

இருசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்றந்—திரவிலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாடன்
நேரார்ரை யட்ட களத்து.

(பொ-ரை) நீர்நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில்; கழுகுகள் இரண்டு சிறகின் கண்ணுமுள்ள ஈர்க்குகளைப் பரப்பி, உதிரத்தோடு பிணங்களைக் கொள்ளை கொள்ளும் காட்சி; கலக்கமில்லாத வோசையையுடைய முழவு பண்ணமைப்பவனை யொத்தன.

(வி-ம்) கழுகுகள் எதையாவது கொத்தித்தின்னும் பொழுது சத்தமிட்டுக்கொண்டே தின்னுவது இயல்பு. அதுபோன்றே மேற்சொல்லிய போர்க்களத்தில் விழுந்துக் கிடக்கும் பிணங்களை யவைகள் தின்னும்பொழுது தத்தமது இருசிறகுகளைப் பரப்பி யடித்துக்கொண்டு ங்ஙீ ங்ஙீ எனுஞ் சப்தத்தோடு தின்பதானது இருகரத்தாலும் மேளமுதலிய வாச்சியங்களை வாசிப்பவர்கள்போலவும், அவ்வாச்சியங்களினின்று முண்டாகு மோசை போலவுமிருந்ததென்க. (தொடர்ச்சியுண்டு) 20

தமிழுழவன்.

தற்புகழ்ச்சி.

குறள்.

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

சீர்மலிந்த சப்த சமுத்திரங்களாற் சூழப்பட்டிராநின்ற விவ் வகண்ட பூவுலகின்கண் வாழும் பஞ்ச அறிவினராகிய யாம் ஞானம்-அஞ்ஞான மென்றும், இதம் - அகிதமென்றும், பெருமை - சிறுமை யென்றும், வாய்மை - பொய்மையென்றும், சன்மார்க்கம் - துன்மார்க்கமென்றும் கண்டு தெளிவான்வேண்டி சகலகலைகளை உருட்டி திரட்டி உட்கொண்டு ஏப்பம் விடுவதனுல் யாதுபயன்? "கற்க கசடற கற்பவை கற்றபி, னிற்க வதற்குத் தக" என்பதற்கு மாருகக்கற்றும் அதன்வழி கிஞ்சித்தேனு மனுசரியா திருப்பது மகாபேதைமையே.

இப்பேதைமையானது பற்பல நடத்தையுடன் வெவ்வேறு நாமங்களையுங் கொண்டிருப்பது ஸ்பஷ்டமே. யெனினும் அவற்றுள் முக்கியமானதொன்றை மாத்திரம் இவண் விளக்கிக்கூறுவாம்:—அதாவது "தற்புகழ்ச்சி" (ஏனையோரால் சிறப்பித்துப் பேச இடமில்லாத காலத்தில் ஒருவன் தன்னைத் தானே வியந்து கூறுதலாம்.) தங்களைத்தாமே புகழ்ந்து கூறும் தன்மையுடைய இம்மூடசிகாமணிகளின் தாத்பரிய மென்னவோ? ஒருகால் தாங்கள் புகழ்ச்சிக்கு ஏதுவான விஷயம் யாதொன்றுஞ் செய்யாதிருப்பதனுல் ஏனையோர் தம்மைப்புகழ்ந்து கூறக் காரணமில்லையெனத் தெரிந்து, மயிலைக்கண்டு நடித்த வான்கோழியைப்போல் தாங்களும் புகழ்ச்சிக் குரியவரென பிறர் பழிக்கும்பொருட்டு தங்களைத் தாங்களே புகழ்ந்து கூறுகின்றார் போலும். இன்னோர் எவ்வளவுதான் தற்புகழ்ச்சியைக் கருதி யிருப்பினும் சுயபுகழ்ச்சிக்குரியவராகா ரென்பது திண்ணம்.

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்—றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

மோராம்பண்டிகை காலத்து பணம்பறிக்கும் பொருட்டு புலிவேடம் கரடிவேடம், பூண்டுவருபவர்கள் சதுர்கால் விலங்குகளாகியபுலிக்கும், கரடி

(தயவுசெய்து கசஅ-ம் பக்கம் பார்க்கவும்)

க்கும் இணையாவரா? அங்ஙனமே ஊராரை வஞ்சிக்கும் பொருட்டு தற்புகழ்ச்சியையாடும் உலோபிகள், சன்மார்க்கர்களாகிய பிரபுக்களின் ஐமாவுக்கேனு (கால்) மிணையாவரா? இல்லை.

தற்புகழ்ச்சியை நாடும் துற்சனர்களை யாமெப் பெயரிட்டு விளிப்பதோ தெரிகிலேம். எனினும் "தன்னைத்தான் புகழுவோரும், தன்குலமே பெரிதெனவே தான் சொல்வோரும்-மற்றும்-அறிவிலாக் கசடராமே" என்னும் நீதி வாக்கியத்தி னாதாரமாக அன்னோரைக் கசடரென்றும், மீண்டும் கள்ளரென்றும், வஞ்சகரென்றும் வரைந்துரைக்க எம்மிறகு கூசவில்லை. இங்ஙனந் தற்புகழ்ச்சியையே நாடியிருக்கும் பேதை மக்களுக்குப் பிறருடைய கீர்த்திமுதலானவைகளைக் கேட்டகாலத்துப் பொறுமைக்கொள்வ ரென்பதற்குஆக்ஷேபனையுமுண்டோ? இன்னோர்பால் அன்பு, வாய்மை, பெருமை, சினமின்மை, அறநெறி, பிறர் க்ஷேமத்தைக் கோருதல், அடக்கமுதலான நற்குணங்களுமிரா. ஆனுலின்னோர்பால் வீண்பெருமை, வியர்த்தமான செலவு, பிறரை வஞ்சித்தல், பேராசை முதலான துர்க்கிருத்தியங்கள் அபரிமிதமா யிருக்குமென்பதற் காட்சேபனையுமுண்டோ?

கடுக்கெனச் சொல்வற்றுங் கண்ணோட்ட மின்றி
யிடுக்கண் பிறர்மாட் டுவக்கு—மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னுட
வேகுமா மெள்ளுமாங் கீழ்.

ஒருகால் இன்னோர் தற்புகழ்சசி யென்னும் பதத்தை முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்னு மவாவினிமித்தம் இவ்வாறு செய்யத் துணிகின்றார் போலும். இன்னோர்க்கு யாம் போதிக்கும் போதனைக ளனைத்தும்—

பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்று
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்காற்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

என்பன போலிராமல் கல்மேலெழுத்துபோல் அன்னர் இருதயத்திற் பதித்து சன்மார்க்கத்தை யனுசரித்து "தற்புகழ்ச்சி" என்பதை இக்கணமே மறந்து, நற்புகழ்ச்சியடையும் மார்க்கத்தை யனுசரித்து நடப்பரென விரும்புகின்றனம். சுபம்! சுபம்!! சுபம்!!!

த. தாமஸ்.

அல்லாசாமி பண்டிகையும் அல்லாத துலுக்கரும்.

செல்வமுடைத்தான இவ்விந்துதேசம் துலுக்கராஜாக்களாலும் தமிழ் ராஜாக்களாலும் ஆளப்பட்டு இப்போது ஆங்கிலேய ராஜாக்களாலும் ஆளப்பட்டிருப்பது யாவருமறிந்ததே. ஷ பண்டிகை துலுக்க அரசாக்ஷியில் துடுக்காகவும் வெகுமுடுக்காகவும் ஜனசங்கதிக்கு இடுக்காகவும், மும்முறப்பட்டு டந்திருக்குமல்லவா? தமிழ் ராஜாக்கள் காலத்திலும் அவ்வாறே நடந்திருக்கலாமென் றெண்ணுவார் சிலர். கொஞ்சம் குறைந்திருக்கு மென்பார் சிலர். ஆனல் நமதாங்கிலேய வரசாட்சியிலேயோ நாளுக்குநாள் நகருதுங் காணம் னைய் என்றபடி வெகுவாகவே மட்டிட்டுப் போனது என்பது யார் தான் சொல்லார். அம்மம்மா! இவ்வளவு அடக்கிவைத்தும் (அல்லாத துலுக்கர்) தாவது துலுக்கரல்லாத இந்துக்களுக்கு புலிவேஷம் முதலானது போட

போலீசார் லைசென்சு கொடுக்காது நிறுத்தியும் பலஇந்துக்கள் துலுக்கநாமதேயத்தைக்கொண்டே அல்லா கிறுத்தவும் வேஷம் போடவும் லைசென்சு பெறுகிறார்கள் அந்தோ! பரிதாபம். இந்துசமயத்தினரின் எந்ததெய்வங்களையும் தொழாதவர்களும், தங்கள் மசூதிபக்கம் இந்துமத உற்சவங்களை விமரிசையாய் கொண்டுவரவொட்டாமல் தடுக்கிறவர்களும், நாம் கிழக்கு நோக்கி கும்பிட்டால் நமக்கு எதிரிடையாக மேற்குநோக்கி கும்பிடுகிறவர்களும் இந்துக்களின் ஒவ்வொரு காரியங்களுக்கும் நேர்விரோதமா யிருக்கின்றவர்களுமாகிய துலுக்கரின் பண்டிகையை கொண்டாடுவதி லென்ன பயனென்பார் சிலர். துலுக்கரிலும் கற்றுணர்ந்த பெரும்பாலார் இத்தகையு அனாச்சாரங்களுக்கு பிரவேசிக்கா திருக்கின்றார்க ளென்பார் சிலர்.இப்பண்டிகை பெருங்கலகத்திற்கும் அடிதடிலுக்கும் காரணமுள்ள தென்பார் சிலர். எப்படி யெனில், பலவிதமான வேஷங்களைப்பூண்டு எல்லோரிடத்திலும் துட்டுதண்டி லாகிரிவஸ்துக்களையருந்தி கெருவத்தோடு மூர்க்கமுங் கொள்ளுவதே, இச்சென்னையில் இந்துக்கள் தவிர துலுக்கரே கொண்டாடினால் இவ்வளவு பெருங்கோஷ்ட மிருக்குமாயென்பார் காண்பவர். இந்துக்களுக்கிருக்கும் பற்பலவிதமான பண்டிகை உற்சவம் தர்மவிஷயமுதலிய காரியாதிகளுக்கு திரவியம் செலவிடாது, இந்தபண்டிகைக்குசெலவிடுவ தேனென்பார்சிலர், அல்லாவைத் தூக்கிக்கொண்டு போகும்போதே மருள்வந்து விடுகிறதே அவ்வற்புதத்திற்காக செலவிடுகிறார்களென்பார் சிலர். சாமானியமாக அல்லாவைத் தூக்கிக்கொண்டு போகிறவர்கள் மீது சாமிவந்து உதகரிப்பதுபோல குதிரையின்மீதுவரும்படியானவர்களுக்கும் விநோதமானகூண்டின்மீது உட்கார்ந்து பிடித்துக்கொண்டு வருபவர்களுக்கும் சாமிவரக்காணோமே என்பார் சிலர், வீண்மமதை கொள்பவர்க்கே வருமென்பார் சிலர், நல்ல இசுலாமான்கள் இவ்விதஞ் செய்யமாட்டார் என்பார் பலர். நமது கனம்பொருந்திய கவர்ன்மென்டார் வீண்வஸ்தாதுகளையும் மார்பைநெளித்துக்கொண்டு நடக்கின்ற கலிப்பாக்களையும் கும்பலிலடிக்கும் வம்புக்காரர்களையும், கல்லாலடிக்கும் சில்லார்களையும், ஓட்டாலடிக்கும் பாட்டாக்கள் காரரையும்,புட்டியாலடிக்கும் துட்டர்களையும் எவ்வளவு அடக்கிவைத்தும் அவிசாரி என்று ஆனைமேல் வரலாம் திருடியென்று தெருவில் வரலாமா என்னும் பழமொழியைக் கவனியாது திருட்டுத்தொழிலையே குடிகொண்டு திரியும் கள்ளர்களையடைக்கும் ஜெயிலிலடைத்தும் பலவிதமான வேஷங்களைப் போட்டும் சவாலெடுத்துத் திரிவார் என்பார் சிலர், ஒருவன் சவாலடித்தால் மற்றவர் தீன் என்று சொல்லுமுன்னமே வௌவால்போல ஓடுங்கல்லும் பறக்குமென்பார் கண்டவர்கள். புலிவேஷத்தோடு எலிவேஷமென்ன? பாம்புவேஷமென்ன? வைத்தியவேஷமென்ன? கரிவேஷமென்ன? சாமியார்வேஷமென்ன? மீசையைச் சிரைத்து பெண்பிள்ளைகள் வேஷமென்ன? பண்டாரவேஷமென்ன? வெட்டியார வேஷமென்ன? முனிசிபல் வேலைக்காரர் இஞ்சினியர் இன்னும் முதலிய பற்பல வேஷங்களென்ன என்று நகைப்பார்களநேகர், ஐயகோ? இவர்கள் வேஷம்போட்டாலும் இவர்கள் மட்டில்லாது துட்டுக்காக கடைக்காரர்களிடத்தில் செய்யும் சண்டைகளெத்தனை? மற்றும் தெரிந்தவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் அவர்கள் மனங்கோணாது கொடுக்கும் தொகை தங்களுக்கு போதாதென்று வற்புறுத்தி யதிகமாய் வாங்குகின்றார்களே என்பார் பலர், எத்தனைபேருக்கு தான் கொடுப்போமென்று தூக்கிப்பார்க் யாதுசெய்யலாமென்பார் பலர், இப்படிவாங்கிய துட்டுக்களால் குடித் மானமின்றி யாட்டமாடிச் செல்வாரைபார்க்க வீட்டுப்பெண்களை கூட்டம்

க்கி மேட்டிமையாகச் செல்லும் தாட்டிகருக் கென்சொல்லுவோ மென்பார் பலர், இத்தகைய வேடிக்கைகளைப்பார்க்க பத்திரிகை நடத்துவோர் சென்றால் இதுவிஷயங்களைப்பற்றி தாங்களாவது பத்திரிகையி லெழுதப்படாதா வென்பார் சிலர். என்ன எழுதினாலும் செய்வதை செய்தேதீருவார்கள் என்பார் சிலர். ஐயே அப்படியல்ல நாளுக்குநாள் கவர்ன்மென்ட் உத்தரவினால் ஒடுங்கியதுபோல் இதுபோன்ற பத்திரிகைகளைப் படிக்கிறவர்களும் அவர்களை நேசிக்கிறவர்களும் இத்தகையதுற்கருமங்களினின்று நீக்கிக்கொள்வார்கள் ஆகையால் பத்திரிகைகளை வாங்கி வாசிப்பது உத்தமமென்பார் சிலர், என்னவாசித்தாலும் ஜென்மத்தில் பிறந்ததை விடமாட்டார்க ளென்பார் சிலர், இவர்கள் என்னவிடா விட்டாலும் கெர்வத்தை பாராட்டினாலும் பொட்டெனக் கட்டி கைப்பூட்டிட்டு கொட்டணங்கொடுப்பார் அரசாட்சியார் என்பது கொண்டு நல்லன்பர்கள் இத்தூர்விஷயத்தில் பிரவேசிக்கமாட்டார்களென்பார் பலராதலால் அன்பர்களீண்டுங் கவனிப்பாராக.

மதுபானனுக்கு கிடைக்கும் பிரதிபலன்.

கள்ளுசாராயம் மதுபானம் லாகிரி யிவையாவும் செய்யும் வெறியனை கண்டமாத்திரத்தில் சிறியோர்முதல் பெரியோர்களனைவரால் அவமதிக்கப் படுகிறான். எத்தகைய ஐஸ்வரியவானாகிலும் சரி, கல்வியில தேர்ந்த கல்வி நிபுணரத்னமானாலும் சரி வயதில் வயோதிகரானாலும் எவ்விதமான அந்தஸ்துக்குரிய மரியாதிகளையும் போக்கடித்து கொள்ளுகிறான்.

கேவல கீழ்மக்களானாலும்நீச்சர்களானாலும்கல்விபயக்காதகாட்டுமிராண்டிகளும் யாவரும், இவனை குடியன், என நிந்திக்கப்படுகிறான். இத்தியாதி வைபவங்கட்கும் இதோர் பெரும் ஸ்தூலமாய் நீச்ச நிலமைக்கு கொண்டு வரக்கூடிய ஓர் பேரலகைக் கொப்பான இக்கொடிய வஸ்துவை என்னவென்று நினைக்ககூடும். ஒருநாள் முழுவதும், பாரியசுமை சுமக்கும் மிருகத்தைப் போன்ற கஷ்டவாளி தலைமீது கஷ்டப்பட்டவனுக்கு தேகாரோக்கியத்திற்கும் இளைப்பாறுதலுக்கும் மாலைப்பொழுதில், ஆயாசந்தீர $4\frac{1}{2}$-திரான் சாராயம் சாப்பிட்டால் தன்சரீரமறந்து அயர்ந்து நித்திரைச்செய்யகூடும். அடுத்தநாள் அதிகாலையில் மறுபடி ஏதாப்பிரகாரம் தன்னுடைய தொழிலைச்செய்ய கூடுமென்பார் சிலர், என்திரேகம் வாதநோய் குடைச்சல் சொற்பமல்ல நிமிஷமுதல் ஆறுதலில்லாத கடூரநோயுக்கு ஷெ சொன்ன மதுவில்லாவிட்டால் என்ஜீவன் ஒருநாள் தரித்திருது என்பாரும்,கை கால் இன்னம் ஏதோ ஊனமாயிருப்பதும் என் அலுவல் எப்போதும், நெருப்பிலிருக்கிறதினால் அது கொஞ்சம் இல்லாவிட்டால் என்னாலாகாது என்றும், நான் குடிக்காரனல்ல யார் தன்மானம் பிறர்மானமென் றுணராமல் பழுக்க குடிக்கிறானோ, அவன்தான் குடிக்காரன், நான் என்சாப்பாட்டுநேரத்தில் மாத்திரம் அளவு பிரமாணமாய் சாப்பிடுகிறேன். அது என் சொந்த பணமல்ல, என் தொழிலில் வரும்படியான லஞ்சம் அல்லது ஆதாயமான அந்தபணம் வைத்து பத்திரபடுத்தக்கூடாது. ஓர் வியர்த்தமாய் கிடைத்தது. ஓர் வியர்த்தமாய் பலபேருக்கும் குடியைகொடுத்து தர்மிஷ்டி என்று பட்டபெயர் யெடுக்க செய்கிறேன் என்பார்கள். இரண்டாவது, ஒரு நல்ல சுபகாரியத்திலோ அல்லது வருஷப்பிறப்பு, தீபாவளி இத்தகையான விசேஷித்த திருநாட்களில் எப்படி சந்தோஷம் கொண்டாடுவது? ஆவியில்லாதவன், பாவியென்றும் குடியாத விடுவிடியாதென்றும் பற்பல கௌரவமாக தாங்களே தற்புகழ்ச்சியாய் பேசி கொள்ளுவதும், குடிக்காரர் தன்னைவிடகொஞ்

சம் அதாவது. தான்கள்ளானால் ஒருமூர்ச்சியில் 5-புட்டி கை சோராமல் சாப்பிடகூடியவர், சாராயம் இதைவிடலாகிரி அதைஒரேமூர்ச்சியில் புட்டியை வாயைவிட் டெடுக்காமல், சாப்பிடபட்டவர், இதைவிட இரண்டுமடங்கு நாணயமாய் சாப்பிடக்கூடியவரைக் கண்டால், தன் மனம் குதூகலமாய் அவரை வேண்டிய விதமாய் புகழ்வார். ஒருவன், குடிவெறி செய்யாதவன், தானும் தன் சமுசார பிள்ளைகளும் பசிதீவினையால் மடிந்தாலும் குடியன், குடிகுடிக்க அழைப்பான். அவன், குடிவேண்டாம், குடிக்கு கொடுக்கும் காசைக்கேட்டால், கொடான். ஆனால் அவனை பலவிதமாய் யேமாற்றி உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் சாராயத்தை ஊற்றி பிராணாபாயமும் போலீஸ் வசமும் இன்னம் அனந்த விஷயங்களுக்கும் ஆளாக்கத் துணிவான் கையில் காசுகொடுக்கமாட்டான். இதோடு தனமட்டில் சதா என்னாளும் சுகவீனனாய் வியாதிக்கு மூலகாரணனாகி விடுகிறான்.

F. C. T.

இன்னும்வரும்.

வினோதகூற்று.

ஒருநாள் இந்தியா எழிலரசியாகிய பிளேக் மாரியம்மாளும், காலரா தேவியும் ஓரிடத்திலுட்கார்ந்து நடந்தவை நடப்பவை இனி நடக்கப்படுவனவாகிய திரிகால வர்த்தமானங்களைப் பேசிக்கொண்டிருக்கையில்,அவ்வழியே சென்ற கலியுக நாரத கலகபிரியமுனி மெல்ல அருகிற்சென்று அம்மணீ, நீங்களார்? அடியேனுக்குத் திருவுளம் பகரவேண்டுமென வேண்டிக்கொள்ள, அப்பா? நாங்களாரென உனக்குத் தெரியாதா? நெற்றி வேர்வை, நிலத்திற்பட கஷ்டப்பட்டு ஜீவனஞ்செய்துவரு மக்களாகிய மானிடரின் இக்கட்டொழித்து, யெமனுலகிற் குடியேற்றி ஆதரித்துவருந் தேவதைகளாச்சுதேயென; பின்னுமொரு கும்பிடும் தலைக்குமேல் போட்டெதிரே நின்ற நாரதரை நோக்கி அப்பா? விரோதமென்னும் அமுதஞ்சொரிகின்ற நின்முகத்தில் அபதூறென்னும் விபூதியிட்டு, கலகமென்னுந் திலகமிட்டு, பங்கமென்னுங் கங்கணம்பூண்டு மேட்டிமை என்னும் வேட்டிதரித்து குண்டுணியென்னுங் கமண்டலமேந்தி மித்திரப்பேதமென்னு முத்திராடமணிந்து தோதகமென்னும் பாதரக்ஷை தொடுத்து பொய் என்னுங் கைகணீட்டி வம்பென்னுங் கும்பிடுபோட்டு படோடோபமென்னும் ஜடாமுடியுட னெதிரேநிற்கும், நீ யாரப்பாவென! ஓ! அம்மணி! தெரியாதா, நான்முந்திய முதல் யுகத்தில் ருக்மாதேவி கண்ணன் முதல் விஷ்ணு பக்தர்களுக்கும், ஈஸ்வரன் முதல் தேவர்களுக்கும், அரசர்களுக்கும், கலகமூட்டியும், அதோடு மூன்றுயுகங்களிலிருந்த நாரதமுனிவரின் அலுவலை நடாத்திவரும் கோலாகல கலியுக நாரதன். நானோ கிளவன் எனக்கும் காலவர்த்தமான பேதாபேதங்களினால் ஒருவேளைக்கிருக்கும் புத்தி யுக்தி நிலைமை மறுவேளைக்கில்லை. அதோடு நான் எங்கே பிரசன்னமாகிறேனோ அங்கெல்லாம் பங்கபலிந்தகேவலமாயும் அவமானமாயும் வைகிறார்கள். இதோடு இப்பொன் வயலில், கூடுவிட்டு கூடுபாயுமுபாயமாய் மூன்றுவிதங்களாக மாறிமாறி சற்று அயர்ந்து இருந்து ஏதோர் நற்காரியமாகிலும் செய்ய புகுங்கால் அதிலுங் கேடுகெட்டுபோக வந்த கொடுமையை நினைக்கில், கிழவன் கீதம் கின்னரத்திற கேற்காவண்ணம் என் ஜபமோங்காது இடையில் அபஜயமே யாகின்றது இவ்விஷயத்தைப்பற்றி யடிக்கடி சிந்தித்து என்னங்கங்குன்றி, மூலையில் இரண்டு விரலால் மூடி முடக்கியிருக்கிறேன். இருப்பினுங் கொஞ்சம் வாலை துவளவிட்டால் ஆயிரங்கணக்கான. கலித்துறை, விருத்தம், வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, என்பது

போக; சிந்து, டப்பா, நாரை, தில்லாலே, களிப்பு முதலியன இருகிரு என்றும் புருபுரு என்றும் நறு நறு என்றும் பறக்கிறதும் அதனல் என்னசெய்யலா மாண்டவனே யென தீராத்துயரத் தள்ளாழ்ந்து திரியுமெனக்குத் தங்களின் தரிசனங்கிடைக்கப் பெற்றதே பாக்கியம்.

இன்னும் வரும். வேங்கைவீரன்.

அபிப்பிராயங்கள்.

திருப்போரூர் ஸ்ரீசண்முகக்கடவுள்மீது யாமியற்றிய "வெண்பாமாலை" என்னும் பிரபந்தத்திற்குச் சாத்துகவி கூறிய பிரபலவித்துவான்கள் தவிற. அந்நூல் வெளிவந்தபின் கண்ட பலரெழுதிய அபிப்பிராயங்களுள்சிலருடையதுமாத்திர மிங்ஙனே யெடுத்தெழுதத் துணிந்தனம்.

ஸ்ரீமான், T. A இராமலிங்கப்பிள்ளை, (நாங்கூனேரிதாலுக்கா கிளர்க்) அவர்கள் கூறிய வெண்பா.

எந்நிறத்து மேலா யிலங்குமுத்து வீரவேள்
தந்நிறத்துப் பாவலங்கற் சாத்தினன்—பொன்னிறத்து
மேனியார்க் கோதியவவ் வித்தகனும் போரூரெஞ்
ஞானியார்க் கோதியிவ னன்று.

வெள்ளை யினமேல் விளங்கும் படிகம்போ
லுள்ளும் புறமு மொருங்கென்று—கள்ளமிறக்
காட்டும்பா கட்டுங் கவித்திறமை யுற்றதால்
வேட்டும்பா கட்டும் விதம்.

ஸ்ரீமான், A. பால்குரோஸ்நாயுடு, (கோலார்.) அவர்கள் கூறிய குளகவிருத்தம்.

புகழேந்தி வெண்பாவில் ஜயங்கொண்டா னெனமுன்னோர் போற்றி னூக்
தகையாக வெண்பாவி கற்பமறிந் தோதினவர் தரணி யில்லை
வகையாக விவையெல்லா மொருங்குடனே சேர்த்துவெண்பாமாலையென்னத்
தொகையாகப் பாடியபூஞ் சோலைமுத்து வீரமண்ணற் றுணிவு கண்டு,

கும்பமுனி குடுவையொளித் தானுதி சேடன்மண்ணைக்குடைந்தானென்றும்
பம்புசெறி முருகன்மயி லேறியொளித் தான்கயிலைப் பரமன் றூனுக்
தும்புசெறி யைவிரலி லொளித்தான்மாற்குறுங்தேறித்தொலைந்தானென்னில்
நம்புபூஞ் சோலைமுத்து விரமண்ணற் பெருமையினை நவிலற் காமோ.

ஸ்ரீமான், பல்லாரி -M. தம்புசாமிப்பிள்ளை, (கோலார்) அவர்கள் கூறிய வெண்பா.

வெண்பாப் புலிகளெலாம் வெட்டுண்டு வெட்கிநிற்க
வெண்பாவெண் மாலையொன்று வேலவர்க்கு—மண்பாற்பூஞ்
சோலைமுத்து விரந் துணிந்தணிவித் தான்வெள்ளை
வேலைமுத்தும் பின்னெ துங்க வே.

ஸ்ரீமான், F. C. தம்புசாமிப்பிள்ளை, (கோலார்.) அவர்கள் கூறிய கட்டளைக்கலித்துறை.

சீரார் புலவர் புகழ்முத்து வீரச் செழுந்தமிழோன்
தாரார் சமர புரியா னடிக்குச் சமர்ப்பித்தநல்

வேரா ரமுதவெண் மாலைவி கற்ப வியலினைக்கண்
டாரார் தலையசைக் காரிந்த நூல்வந்த வானந்தமே.

ஸ்ரீமான், சண்முகசுந்தரமுதலியார், (பாலக்காடு.) அவர்கள்
எ ழு தி ய வ ச ன ம்.

"பூலோக வியாசன்" பத்திராதிபருக்கு வந்தனம்.

ஐயா! தாங்களெம்பா லன்புற்றனுப்பிய "திருப்போரூர் சண்முகக்கடவுள் வெண்பாமாலை" எனுமோர் வெள்ளியனூலைக்கண்டு யாமடைந்த ஆனந்தங்கொஞ்சமல்ல. இந்நூலைக்கண்ட பலரும் அவ்வாறே குதூகலித் திருப்பார்களென்பதற் காக்ஷேபமின்று. ஆயினுஞ்சிலபோலிப்புலவர்களும், ஸ்நேகத்துரோகிகளும்குருத்துரோகிகளும், படாடோபக்காரரும், தங்கல்வியைப் பிரகாசிக்கச்செய்யும் வழியில்லாதவர்களுமே இதில் அது சொட்டை, இது சொள்ளையெனபலவாறு தம்மனம்போனவாறு பலரிடத்தில் உளரித்திரிவார்கள். ஆனால்உண்மையிற் கல்வியைப் பிரகாசத்திற்குக்கொண்டுவரு முத்தேசத்திலுழைக்கும் அன்பர்களியாவரும் இந்நூலுக்குவேண்டிய இலக்கண முதலியவைகளோடு விளக்கமாக வெளியிடுமாறு தங்களால் கூடியவரையில்பொருட்சகாயம் புரிய முன்வருவார்களானால் அவர்களில் யானுமொருவனாகவிருந்துஷை நூலை இரண்டாம் பதிப்புக்குக் கொண்டுவர உத்தேசம். இது துரிதத்தில் முடிவுபெறுமாயினந் தமிழ்நாட்டுக்கு மிகவு மனுகூலமா யிருக்குமென்பதற்கையமின்று.

ஷை "வெண்பாமாலை" என்னும் நூலைப்பெற விரும்புவோர் ஒரு அணுதபால்முத்திரை யனுப்பி நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். பத்—ர்.

றகர ரகரப் பேதங்கள்.

மறவினையாளர் - தட்டர், பாவிகள்
மரவினையாளர் - தச்சர்
மாறன் - பாண்டியன்
மாரன் - மன்மதன்
முறம் - விசாகநாள்
முரம் - புடைக்குமுரம்
விறகு - இந்தனம்
விரகு - தந்திரம்
விறலி - பதினாறுவயது பெண், மகடூஉ
விரலி - நெடியவிரலை யுடையவள்
விறலோன் - அருகன், திண்ணியன்
விரலோன் - நீண்டவிரலையுடையவன்
விறல் - பெருமை, வலி, வீரம், வெற்றி
விரல் - கை காலிலுள்ளவிரல்
வீற - ஓங்க, உயர
வீர - வீரத்தன்மையுள்ள

ற - ர

அறா - நீங்காத
அரா - பாம்பு, அராவென்னேவல்
இறார் - இறான்மீன், கடன்கொடாதவர்
இரார் - இருக்கமாட்டாதார்
எறா - எறாத
எரா - அழகாய்
எறாளர் - படைவீரர்
எராளர் - அதிகத்தொகைப்பட்டவர்
கறா - காடைக்குரல்
கரா - முதலை
சாறார் - கள்ளுள்ள, குலகிறைந்த
சரார் - பகைவர், சேராதவர்
சுறா - ஓர்மச்சம்
சுரா - சுரருடைய, சுராபானம்
தேறார் - மனமாறுதலடையார்
தேரார் - பயிலார், மெட்டிக்காரராகார்.

சமாசாரக்கொத்து,

ஜப்பான் தேசம் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது. மிக்கவிசனம் பத்துலக்ஷம் ஜனம் பசியால் வருந்துகின்றார்கள். ஜப்பான் சக்ரவர்த்தியாரவர்கள் ஐம்பதினாயிரம் "என்" கொடுத்தார் ஒரு "என்" ஏறக்குறைய இரண்டரை ரூபாயாம்.

அவசரகோலம் அள்ளித்தெளித்தாப்போல், கோடீஸ்வரியானஓர்மாது தன் கணவனிறந்த மறுமாதமே, ஸான் பிரான்சிஸ்கோ வென்னும் கூட்டத்

தைச்சேர்ந்த ஒருவனை மணஞ்செய்துகொண்டாள், அம்மணமகனும் அம்மாதை மணம்புரிந்த இரண்டு மூன்று வாரத்துக்குள் கைநழுவவிட்டானும். பரிதாபம்.

நகரும்மலை—கொலம்பியாநதியை அடுத்த 2,000 அடி உயரமுள்ளஒரு மலை இருக்கிறது. அது மெதுவாய் தன்னிலையைவிட்டு நகர்ந்துகொண் டிருக்கிறதாம். அரசர்களுக்குக் கடிதங்கள்—நமது இந்தியசக்ரவர்த்தியாருக்கு நாளொன்றுக்கு ஆயிரங்கடிதங்களும், இரண்டாயிரத்திற் கதிகமான சமாசாரபத்திரிகைகளும் வருகின்றதாம். ருஷியசக்ரவர்த்திக்கு 650 கடிதங்களும், இட்டாலியா ராஜாவுக்கு 500 கடிதங்களும், ஹாலான்ட் மஹாராணிக்கு சுமார் 150 கடிதங்களுமாம். விசனம்—இந்தியன் ஒபீனியன் என்றநட்டால் பத்திரிகையை நடத்திவந்த பத்திராதிபர் மிஸ்டர், M. A. நாஜார்காலஞ்சென்றது விசனிக்கத்தகுந்ததே. இவர் இந்தியர்களுடைய நன்மைக்காய் உழைத்தவர். பரோபகாரி. விந்தையான கட்டடம்—அமேரிக்காவில் ஒருதுண்டு மரமாவது ஒரு ஆணியாவது இல்லாமல், ஒருவித களிமண்ணினால் ஒரு ஆலயங்கட்டப்பட் டிருக்கிறது. ஏரிகளிலுயர்ந்தது—உலகத்தில் ஆழமுள்ள ஏரி, சைபிரியாவிலுள்ளது. அதன்பெயர், பைகால். அதன் ஆழம் 4500 அடி.

சென்னைக்குப் புதியகவர்னர்—மார்ச்சுமீ 28உ புதன்கிழமை நமது புதுகவர்னராகிய, மேன்மைபொருந்திய சர் ஆர்தர்லாலி கெ. சி. எம். ஜி. ஜி.வி.ஐ.ஈஅவர்கள் தனது உத்தியோகத்தைஒப்புக்கொண்டார். நீடுவாழ்க. கடந்த மார்ச்சுமீ 15தேதி—கோலார் மாரிகுப்பம் கனம் D. அந்தோனி பிள்ளையவர்களும், கனம் ப. தம்புசாமிபிள்ளை யவர்களும் சென்னைக்கு விஜயஞ்செய்திருந்தார்கள். அத்தருணம் ஸ்ரீமான் D. அந்தோனிபிள்ளை யவர்கள் பாக்கட்டிலிருந்து நூறுரூபாய் நோட்டு காணமற்போனது விசனம். இம்மாதம் முதல்தேதி:—உரிகம் கனம் கன்னியப்பன் பிள்ளையவர்கள் சென்னை பிரம்பூர் நண்ணி, தம்மால் கட்டப்படும் ஸ்ரீதுளிர்க்காணத் தம்மன் கோவிலை நன்கு முடிக்கவேண்டிய பிரயாசை எடுத்துச் செய்வனச் செய்து மறுநாள் உரிகம் சென்றார்.

சென்னை ராஜதானி வரவுசெலவு கணக்கானது சென்றவியாழக்கிழமை யன்று பிரசுரிக்கப்பட்டது. அடுத்த வெள்ளிக்கிழமை யன்று, சென்னைச் சட்ட நிரூபணச் சபை கூடும்போது இக்கணக்கானது தர்க்கிக்கப்படும். இந்த 1905-1906-ஆம் வருஷத்தில், அதாவது இந்தமார்ச்சுமாதம் 31-ஆந் தேதியுடன் முடிகின்ற வருஷத்தில் சென்னைக் கவர்ன்மெண்டில் செலவெல்லாம் போக 81.81-லக்ஷம் ரூபாய் மீதியாயிருக்குமென மதிப்பிடப் பட்டிருக்கிறது. அடுத்த ஏப்பிரல் மாதத்துடன் ஆரம்பமாகிற 1906-1907-ஆம் வருஷத்தில் 478. 10-லக்ஷம் ரூபாய் வரும்படி வருமென்றும் 491. 01-லக்ஷம் ரூபாய் செலவாகுமென்றும் மதிப்புப் போடப்பட் டிருக்கிறது. ஆகையினாலே இவ்வருஷக் கடைசியில் மீதமாகும். 81. 81-லக்ஷம் ரூபாயையும் அடுத்த வருஷம் வரும்படி வருமென மதிப்புப் போடப்பட் டிருக்கிற 478. 10-லக்ஷம் ரூபாயையும் சேர்த்து அதிலிருந்து அடுத்த வருஷத்துச் செலவென மதிப்புப் போடப்பட் டிருக்கும். 491,01-லக்ஷம் ரூபாயையும் கழித்துவிடும்போது, அடுத்த வருஷக்கடைசியில் 68,90-லக்ஷம் ரூபாய் மீதமாகுமென மதிப்புப்போடப் பட்டிருக்கிறது. வருஷந்தோறும் செலவெல்லாம் போக இருபது லக்ஷம் ரூபாயே மீதமாக வேண்டியது வழக்கமாக ஏற்ப

ட்டகணக்கான படியால், அடுத்த வருஷக்கடைசியில் இந்த இருபது லக்ஷத்தைவிட 48,90-லக்ஷம் ரூபாய் மீதியாயிருக்கும்.

ஜப்பான் தேசத்தில் டாக்கா ஷிமா என்றவிடத்தில் நிலக்கரிச் சுரங்கமொன்று வெடித்து 256-பேர் கொலையுண்டார்கள்.

சிகரெட் பிடித்தல்—16-வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகெரெட் விற்பனை செய்யக் கூடாதென்றும், அப்படிமீறி நடப்பவர்களை குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்களென்றும், ஸர்ராலப் விட்லர் ஒருமசோதா தயார்செய்து சட்டமாகக் கொண்டு வருவாரென்று மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை கூறுகின்றது.

அடைக்கலக்குருவி—சாதாரண அடைக்கலக்குருவி ஒருமணிக்கு எழுபத்திரண்டு மயில் பரக்குமாம்.

ஸ்திரீகளின் தீரம்—நீந்துவதில் மிகத் தேர்ந்தவர்களெனப் பேர்பெற்ற ஓர் பிரான்சியமாதுவும், ஓர் அமெரிக்கமாதுவும் 6000 பவுன் பந்தயங்கட்டி அநேக ஜனங்களுக்கு முன் நீந்தியபோது 5-மணி நேரம் நீந்துவதாக சபதங்கூறிய அமேரிக்கமாது $4\frac{1}{2}$-மணிநேரம் நீந்தி நீரிலமிழ்ந்தனள். 4-மணிநேரம் நீந்துவதாக சபதங்கூறிய பிரான்சிய மாதுவோ பந்தயத்தைக் கெலித்தனள் எவ்விதமாயினும் இருவர்களும் மிக்க வீரியமும் தைரியமுமுடைத்தவர்களே

ஒருஸ்திரீ பிரசங்கம்—திருப்பதிக்கு சமீபத்திலுள்ள பத்மலைரோவரம் என்னும் ஊரில் மாதவ சித்தாந்த சபையாரின் ஆதினத்தின்படி கூடப்பட்ட ஒரு சபையில் ரங்கமமாள் என்னும் ஒரு பாலிய ஸ்திரீ பெண் கல்வியைப் பற்றி கன்னடபாஷையில் ஒரு அரிய உபந்நியாசம் செய்தனள். அக்காலத்தில் 700 மாத்வ ஸ்திரீகள் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

ஒரு பெரிய பீரங்கி குண்டு—உலகத்தில் இது வரையில் செய்யப்பட்ட பீரங்கி குண்டுகளிலெல்லாம் பெரிது ஜார் கவர்ன்மென்டாருக்காக எஸ்ஸனில் குருப் ஒர்க்ஷாப்பில் செய்யப்பட்ட 2,600 பவுன் எடையுள்ள பீரங்கி குண்டேயாம். இந்த பீரங்கியில் குண்டுகள் சுடப்பட்டால் 12-மயில்தூரம் போகுமாம். ஒருதரம் சுடுகைக்கு 300 பவுன் செலவாம்.

சுதேசியப்பொருட்காட்சி—கல்கத்தா காலேஜ் வீதியில் ஒவர் டவுன் ஹாலில் Y. M. C. A. சங்கத்தார் ஆதரணையின்கீழ் சுதேசசாமான்களின் பொருட்காட்சி மார்ச்சுமீ 31உ நடத்தப்படும். இப்பொருட்காட்சிக்கு எல்லோரும் சாமான்கள் அனுப்பலாம். முதல்தரமானசாமான்கட்கு சர்டிபிகேட் கொடுக்கப்படும். கல்கத்தா முனிசிபல்கார் பொரேஷன் சேர்மன் ஆனரபில் C. H. H. ஆல்லன் அச்சமயம் அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

புகையிலைப் பயிர்—உலகத்தில் 850,000 டன் புகையிலை 2,250,000 ஏகரா நிலத்தில் பயிரிடப்பட்டு வருகிறது.

சென்னை கைத்தொழில் சங்கம்—இச்சென்னையில் தக்க பிரமுகர்களால் கைத்தொழி லபிவிர்த்தியின் பொருட்டு ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் 21 வயதிற்கு மேற்பட்ட எந்த இந்தியரும் சேரலாம். இதற்கு வருட சந்தா மூன்று ரூபாய். இதற்கு காரியதரிசி மிஸ்டர் C. சுப்பரமண்ய அய்யரவர்கள் B. A. இச்சபைக்கு நீண்ட ஆயுளைக்கொடுக்குமாறு சர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.